ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

ஜூன்—1963

மறைந்த — போப் ஆண்டவர்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

புதுக்கோட்டை எய்டட் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்

தலைவர்

Rev. R. S. தேவானுக்கிரகம்



பொதுச் செயலாளர்

திரு. தி. சு. மலையப்பன்

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 25 ஜூன் 1963 இதழ் 6

ஜனநாயகத்திற்கு மாறான முறைகள்

இந்தியாவுக்கு மேற்கேயும் கிழக்கேயும் உள்ள பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி நிலவி வருகிறது.

இந்தியாவுக்குக் கிழக்கே உள்ள பர்மாவில் நிலவி வருவதும் இராணுவ ஆட்சிதான்.

அந்தப் பர்மாவுக்கு அடுத்தாற்போல் உள்ள தாய்லாந்தில் ஏற்பட்டிருப்பதும், இராணுவ அடிப்படையில் அமைந்த சர்வாதிகார ஆட்சிமுறைதான்.

இந்தியாவுக்குத் தெற்கே நெடுந்தொலைவில் உள்ள இந்தோனீசியாவில் இருப்பதும் ஒரு வகை சர்வாதிகார ஆட்சிமுறைதான்.

இவ்வாறாக இந்தியாவைச் சுற்றியுள்ள பல்வேறு நாடுகளிலும் சர்வாதிகார ஆட்சிமுறை இருந்துவந்தபோதிலும், இந்தியாவில் மட்டும், ஜனநாயக ஆட்சிமுறையானது, ஓங்கி வளர்ந்து ஒளி வீசித் திகழ்வது, இந்திய மக்கள் அனைவருக்கும் பூரிப்பையும் பெருமையையும் அளிக்கத்தக்க ஒரு நிலைமையாகும்.

ஆசியாக் கண்டத்தின் தலையாய ஜனநாயக நாடாகத் திகழ்வது இந்தியாதான்.

அதுமட்டும் அல்ல. உலகத்தின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகப் பட்டொளி வீசிப் புகழ் மணக்க வாழ்வது இந்தியாதான்.

அமெரிக்கா, பிரிட்டன், இலங்கை, சுவிட்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகள் யாவும் ஜனநாயக நாடுகள்தாம். ஆனால் அந்த நாடுகள் ஒவ்வொன்றையும்விட மிகக் கூடுதலான மக்கள் தொகையை உடைய ஜனநாயக நாடு, இந்தியா.

ஏறத்தாழ 44 கோடி மக்களை உடைய இந்த மாபெரும் நாட்டில் ஜனநாயக ஆட்சிமுறை கையாளப்பட்டுவருவது, இந்த நாட்டுக்கு மட்டுமல்ல, ஜனநாயகக் கோட்பாட்டுக்கேகூட ஒரு தனிப் பெருஞ் சிறப்பை அளிக்கவல்ல நிலைமையாகும்.

இந்தியாவில் ஜனநாயக முறை நிலைத்து நின்று நீடித்த புகழ் பெறுமானால், ஆசியாக் கண்டம் முழுவதிலும் ஜனநாயகக் கோட்பாடு வெற்றிக் கொடி வீசி வீர நடை போட முடியும். ஆசியாக் கண்டத்தில் ஜனநாயகம் தழைத்துச் செழித்துச் சிறந்து பொலியுமானால், உலகம் முழுவதிலும், அதன் செம்மையும் செழுமையும் புகழ் பெற்றுத் துலங்கும். அவ்வாறின்றி, இந்தியாவில் ஜனநாயகம் வீழ்ச்சியுறுமானால், ஆசியாவிலும், உலகத்திலும் அது வீழ்ச்சி அடையக்கூடும். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், இந்தியாவில் ஜனநாயக ஆட்சிமுறை இருந்து வருவது எத்துணைச் சிறப்புமிக்க நிகழ்ச்சி என்பது விளங்கும்.

இந்தியாவில் ஜனநாயக ஆட்சிமுறை இருந்துவருவது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதில் துளியளவும் ஐயம் இல்லை. ஆனால் அத்தகைய மகிழ்ச்சி நம் உள்ளத்தை முற்றுகையிடுகிற அதே நேரத்தில் இந்த ஜனநாயக முறையிலேயே, ஜனநாயகத்திற்கு மாறான பல நடவடிக்கைகள் அவ்வப்போது ஆட்சியாளர்களால் கையாளப்படுகின்றன என்பதை நம்மால் எடுத்துக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

இந்திய ஜனநாயகம் முழுமை உடையதாக இருக்க வேண்டும்; அப்படி இருந்தால்தான் இந்த ஜனநாயகத்தால் இந்திய மக்கட்

சமுதாயமும் உலக மக்கட் சமுதாயமும் பெறக்கூடிய நன்மைகள் அனைத்தையும் குன்றாமல் குறையாமல் பெற முடியும் என்பது நம்முடைய அழுத்தந் திருத்தமான கருத்து. அந்தக் கருத்தை முன் வைத்துத்தான், இந்திய ஜனநாயக ஆட்சியின் நடைமுறையில் காணப்படுகிற சிற்சில குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1965 முதல் இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக இந்தி மொழி மட்டுமே இருக்கும் என்று இந்திய அரசாங்கத்தாலும், பாராளுமன்றத்தாலும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சிற்சில ஆட்சி மொழி அலுவல்களுக்கு ஆங்கிலமும் பயன்படுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இந்தியாவுக்கு இரண்டு ஆட்சி மொழிகள் உண்டு என்றும், அவற்றில் ஒன்று இந்தி என்றும், மற்றொன்று ஆங்கிலம் என்றும் தெரிவிக்கப்படவில்லை. இந்தி ஒன்றை மட்டுமே ஆட்சி மொழியாக ஆக்கியுள்ள இந்த முடிவு, இந்திய ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள மாபெரும் களங்கம் என்று நாம் கருதுகிறோம்.

இந்தியாவில் ஏறத்தாழப் பதினாறு மாநிலங்கள் இருக்கின்றன. இந்தப் பதினாறு மாநிலங்களில் நான்கு மாநிலத்தவர்களுக்கு மட்டுமே இந்தி, தாய்மொழி ஆகும். ஏனைய பன்னிரண்டு மாநிலத்தவர்களுக்கும் இந்தி, அந்நிய மொழியே. நான்கு மாநிலத்தவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு மொழியை, பதினாறு மாநிலத்தவர்கள் மீதும் ஆட்சி மொழியாகத் திணிக்கும் ஒரு முறையை ஜனநாயகக் கோட்பாட்டுக்கு ஒத்த முறை என்று யாரும் கூற முடியாது.

இந்தி மொழி ஒன்று மட்டுமே இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டால், இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்தான் இந்தியாவின் தலைமைக் குடிமக்களாக ஆகிவிடுவார்கள். இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாத ஏனைய மக்களெல்லாம் இரண்டாந்தரக் குடிமக்களாகத்தான் இருக்க முடியும். இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் எவ்வளவுதான் இந்தி மொழியை வருந்தி வருந்திக் கற்றாலும், அதனைத் தாய்மொழியாக உடையவர்களோடு போட்டியிடுவது என்பது இயலாத செயல். அது மட்டுமல்ல. இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு இல்லாத பல சலுகைகள்—பல அனுகூலங்கள்—பல நன்மைகள்—பல செல்வாக்குகள், இந்தி மொழிக்காரர்களுக்கு ஏற்பட்டுவிடுவது இயற்கை. அவ்வாறு ஏற்படக்கூடிய சலுகைகளுக்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்தி மொழி மட்டுமே இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக உள்ள நிலைமையில்,

இந்தி மொழிக்காரர்கள் ஒவ்வொருவரும், இந்தி—ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளைக் கற்றால் போதும். ஆனால் ஏனைய மொழிகளைச் சார்ந்தவர்களோ, தங்கள் தாய்மொழி, இந்தி மொழி, ஆங்கில மொழி ஆகிய மூன்று மொழிகளைக் கற்றாக வேண்டும். கல்வித் துறையில் இந்தி மொழிக்காரர்களுக்கு இருக்கக்கூடிய சுமையைவிட இந்தி மொழி யல்லாத பிற மொழியினருக்கு இருக்கக்கூடிய சுமை, மிகக் கூடுதலாக இருக்கும். நாட்டில் உள்ள ஒரு சாராருக்கு மிகக் குறைவான சுமையும், பிற சாராருக்கு மிக அதிகமான சுமையும் இருப்பது எவ்வாறு ஜனநாயக முறையாகும்?

அதுமட்டுமல்ல. இந்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி என்ற அந்தஸ்து— செல்வாக்கு— சிறப்பு— பெருமை— பூரிப்பு, இந்தி மொழிக்கு இருக்கும். ஆனால் பிற மொழிகளுக்கோ? அந்தப் பெருமையும் சிறப்பும் புகழும் செல்வாக்கும் இருக்கமாட்டா. மொழிகளுக்கு இடையே இத்தகைய பாரபட்சம் இருப்பது ஜனநாயக முறை ஆகுமா? ஆட்சியாளர்கள் அன்புகூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தியாவின் பல்வேறு மொழிகளுக்கு இடையேயும் பல்வேறு மக்களுக்கு இடையேயும் காட்டப்படுகிற இந்த வேறுபாடு—ஜனநாயகக் கொள்கைக்கு மாறான வேறுபாடு நீங்க வேண்டுமானால், இந்திய அரசாஙகத்தின் ஆட்சி மொழிகளாக, இந்தியாவின் தேசிய மொழிகளாக அரசியல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதினான்கு மொழிகளும் ஆக்கப்பட வேண்டும். அத்தகைய திட்டம் நிர்வாக நடைமுறைக்கு ஒத்துவராது என்று அரசாங்கம் கருதுமானால், ஆங்கிலம் ஒன்றை மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழியாக வைத்திருக்க முடிவு செய்யப்பட வேண்டும். ஆங்கிலம் ஒன்று மட்டுமே ஆட்சி மொழியாக இருக்குமானால், இந்தியாவில் உள்ள எல்லா மக்களும், தங்களுடைய தாய் மொழி, ஆங்கில மொழி, ஆகிய இரண்டே மொழிகளைக் கற்றால் போதும். அத்தகைய திட்டத்தில், சிலர் இரண்டு மொழிகளை மட்டுமே கற்பது—பிறர் மூன்று மொழிகளைக் கற்பது என்கிற இழிநிலை இராது. இந்திய அரசாங்கத்தார் அன்புகூர்ந்து இந்த உண்மையை ஆற அமர இருந்து சிந்தித்துப் பார்த்து, ஆங்கிலத்தை மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாக ஆக்க முன்வர வேண்டும். அப்படி முன் வருவதுதான், இந்தியாவின் எதிர்காலத்தை, ஒளி உள்ளதாக—புகழ் மிக்கதாக—பெருமை நிறைந்ததாக—சிறப்பு வாய்ந்ததாக ஆக்குவதற்கு உரிய வழியாகும்.

சில வகுப்புகளுக்கான பாட நூல்களை அரசாங்கத்தாரே வெளியிடுவது என்பது; சென்ற சில ஆண்டுகளாகச் சில மாநில அரசாங்கங்களால் கையாளப்பட்டு வருகிற ஜனநாயகத்திற்கு மாறான ஒரு

செயலாகும். தமிழ் நாட்டு அரசாங்கத்தார் கூட, சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் ஆரம்பப் பள்ளிகளுக்கான சில பாட நூற்களை வெளியிட்டுள்ளார்கள்.

பாட நூல்களை அரசாங்கத்தாரே வெளியிடுவது என்னும் ஏற்பாட்டை ஜனநாயக நோக்கம் படைத்த எந்த அரசாங்கமும் ஏற்றுக் கொள்வது முறை ஆகாது. இங்கிலாந்து தலை சிறந்த ஒரு ஜன நாயக நாடாகும் அங்கே இந்த ஏற்பாடு இல்லை. அமெரிக்கா ஒரு மாபெரும் ஜனநாயக நாடு ஆகும். அங்கே இத்தகைய ஏற்பாடு கிடையாது. பொதுவாகச் சொல்வதானால், சர்வாதிகார ஆட்சி முறை உள்ள நாடுகளில் மட்டுமே இத்தகைய ஒரு திட்டம் காணப் படும்.

ஒவ்வொரு துறையிலேயும் எந்த எந்தக் கருத்து நியாயமானது என்று சர்வாதிகாரி கருதுகின்றாரோ, அல்லது சர்வாதிகார அரசாங்கம் கருதுகிறதோ, அதே கருத்தைத்தான் மக்களும் நியாய மானதாகக் கருதவேண்டும் என்பது, சர்வாதிகார நடுகளின் தலையாய கோட்பாடு ஆகும். அரசாங்கத்தின் கருத்துகளே நியாய மான கருத்துகள் என்னும் எண்ணத்தை மக்களுடைய உள்ளங் களில் வேரூன்றச் செய்வதற்கு உரிய ஒரு கருவியாகக் கல்வியானது சர்வாதிகார நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. கம்யூனிச முறை யில் அமைந்த சர்வாதிகார நாடுகளிலும் சரி, ஹிட்லர்—முசோலினி போன்றோரின் முறையில் அமைந்த சர்வாதிகார நாடுகளிலும் சரி, கல்வி, இத்தகைய ஒரு கருவியாகத்தான் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய நோக்கம் படைத்த நாடுகளில், இந்த நோக்கத்தை நிறை வேற்றுவதற்கு ஏற்ற முறையில் அரசாங்கத்தாலேயே பாட நூல்கள் எழுதப்பட்டு, அரசாங்கத்தாலேயே வெளியிடப்படுவது இயற்கை. அந்தப் புத்தகங்கள், அரசாங்கக் கருத்துக்களை மிகவும் பக்குவமான முறையில் இளம் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களில் திணிக்கும். பிரசாரக் கருவிகளாகவே இருக்கும்.

ஆனால் ஒரு ஜனநாயக நாட்டில் ஜனநாயக உள்ளம் படைத்த எவரும் இத்தகைய முறையை வரவேற்க முடியாது. ஏனென்றால், சர்வாதிகார ஆட்சியைப் போல, ஜனநாயக ஆட்சிமுறையில் ஒரே தலைவர், அல்லது ஒரே கட்சி, அல்லது ஒரே கொள்கை, நாட்டை என்றென்றும் ஆட்சிபுரியும் என்று கூறமுடியாது. ஐந்து ஆண்டு களுக்கு ஒரு முறை நடைபெறும் பொதுத் தேர்தலின் விளைவாக அதுவரை ஆட்சிப் பீடத்தில் கொலு வீற்றிருந்த கட்சி கீழே இறக்கப்பட்டு, வேறொரு கட்சி ஆட்சி நாற்காலியில் அமர்த்தப் படக் கூடும் இத்தகைய சூழ்நிலையில், அரசாங்கத்தாரே பாட நூல்களை வெளியிடுவதானால், அந்தப் பாட நூல்களின் அடிப்படைப் போக்கு; ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாறிக்கொண்டே இருக்

கும். ஒவ்வொரு கட்சி ஆட்சிப் பீடத்தில் இருக்கும் போதும், அந்தந்தக் கட்சியின் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் ஏற்ற முறையிலும், அந்தந்தக் கட்சியின் தலைவர்களைப் பாராட்டுகின்ற பாடங்களைக் கொண்டதாகவும் நூல்கள் இருக்கவேண்டும் என்று அந்த அந்தக் கட்சியினர் விரும்புவது இயல்பு பாடநூல்களை எழுதுபவர்கள் ஆசிரியர்களே தவிர அமைச்சர்கள் அல்ல என்பது உண்மைதான். ஆனால் அரசாங்கத்தால் வெளியிடப்பட இருக்கிற பாடநூல்களில், அமைச்சர்களின் கருத்துக்கு மாறான கருத்துகளை அமைத்து எழுதுகிற துணிச்சல்—தைரியம்—எத்தனை ஆசிரியர்களுக்கு இருக்க முடியும்? அப்படியே சில ஆசிரியர்கள் துணிந்து எழுதினாலும், அத்தகைய நூல்கள் அரசாங்கத்தால் வெளியிடப்படமாட்டா.

எனவேதான் எந்த ஜனநாயக நாட்டிலும் பாடநூல்கள் தனியாரால் வெளியிடப்படுகின்றன. தனியாரால் நூல்கள் வெளியிடப்பட்டால்தான், பல்வேறு பதிப்பகங்கள், பல்வேறு ஆசிரியர்களைக் கொண்டு, ஒரே வகுப்புக்கு—ஒரே பாடத்திற்குப் பல்வேறு நூல்களைத் தயாரித்து வெளியிடுகிற சிறந்த நிலை இருக்க முடியும். பல்வேறு ஆசிரியர்கள் தத்தம் தனித் திறமைகள்—அறிவு ஆற்றல்களுக்கு ஏற்பப் படைத்திற நூல்களை எழுதி, பல பதிப்பகங்கள், அந்நூல்களைத் தத்தம் திறமைக்கும் வசதிக்கும் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப வெவ்வேறு வகையான படங்களோடும் முறைகளிலும் வெளியிட்டால்தான், பள்ளிக்கூட ஆசிரியர்கள், தத்தம் வட்டார மாணவர்களின் இயல்புக்குப் பொருந்திய நூல்களை அவற்றிலிருந்து தேர்ந்தெடுத்துத் தம் பள்ளிகளில் வைக்கமுடியும் அவ்வாறின்றி, ஒவ்வொரு வகுப்பின் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரே ஒரு நூல் தான் வெளியாகும்—அந்த நூலை அரசாங்கத்தார்தான் வெளியிடுவர் என்று நிலைமை இருந்தால், பாடபுத்தகங்களைத் தெரிந்து எடுக்கும் வாய்ப்பும் உரிமையும் ஆசிரியர்களுக்கு இல்லாமற் போகுமா.

கட்டுக் காவலற்ற முறையில் பல்வேறு சிந்தனைகள் மலர்ந்து மணம் வீசுவதுதான்—வீச அனுமதிக்கப்படுவதுதான் ஜனநாயகக் கட்டிடத்தின் அடிப்படையாகும். அரசாங்கத்தாரே பாட நூல்களை வெளியிடுவது என்கிற ஏற்பாட்டில் இந்த அடிப்படையே தகர்ந்து போகிறது. தகர்ந்துபோக விடலாமா? விடுவது, ஜனநாயகமா?

தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள், சென்ற பத்தாண்டுகளாக, ஆரம்பக் கல்வித் துறையில் உள்ள தனியார் பள்ளிக் கூடங்களின் வளர்ச்சியைத் தடுக்க வல்ல பல உத்தரவுகளை, ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கடுக்காக, ஒன்றைத் தூக்கிக் கொண்டு மற்றொன்று என்ற முறையில் வெளியிட்டபடி இருக்கிறார்கள். மாணவர்களிடமிருந்து இந்தப் பள்ளிக்கூடங்கள் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்கிற

உத்தரவையும் பிறப்பித்துவிட்டு, இந்தப் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்குத் தேவைப்படுகிற மிக நியாயமான செலவுத் தொகையை மானியமாகத் தரவும் தமிழக அரசாங்கத்தார் மறுக்கிறார்கள். தமிழக அரசாங்கத்தார் தருகிற உதவித் தொகை, நியாயமாக ஆகிற செலவுகளில் கால் பகுதி அளவுகூட இல்லை. அப்படியானால், பிற செலவுகளைத் தனியார் நிர்வாகிகள் எங்கிருந்து பெற முடியும்? எப்படித்தான் அவர்கள் தம் பள்ளிக்கூடங்களை நடத்த முடியும்? இந்தக் கேள்விகளை நாம் எண்ணற்ற முறை கேட்டாகிவிட்டது. விடைதான் கிடைக்கவில்லை. ஆட்சியாளர்களிடமிருந்து. ஒரு வேளை, தனியார் நிர்வாகிகளுக்கு இப்படியெல்லாம் இடர்ப்பாடுகளையும் இடுக்கண்களையும் உண்டாக்கிக் கொண்டிருந்தால் அவர்கள் இத்தொல்லைகளைப் பொறுக்காமல் பள்ளிக்கூடங்களை மூடிவிடுவார்கள்; பின்னர் எல்லாப் பள்ளிக்கூடங்களையும் அரசாங்கமே நடத்தலாம் என்று அரசாங்கத்தார் கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அத்தகைய கருத்து அரசாங்கத்தாருக்கு இருக்குமானால், அதைவிட ஜனநாயக விரோதமான போக்கு வேறு இருக்க முடியாது.

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் சில உயர்நிலைப் பள்ளிக்கூடங்களை இந்திய அரசாங்கத்தாரே ஏற்படுத்த இருக்கிறார்கள் என்றும், இந்தப் பள்ளிக்கூடங்களுக்கான பாட நூல்கள் இந்தியா முழுவதிலும் ஒரே வகையாக இருக்கும் என்றும், இவற்றிற்கான பாடத்திட்டத்தையும் இந்திய அரசாங்கத்தாரே ஏற்படுத்த இருக்கிறார்கள் என்றும் அண்மையில் ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. இந்திய அரசியல் திட்டப்படி கல்விப் பொறுப்பானது, மாநில அரசாங்கங்களைச் சேர்ந்த ஒன்றாகும். உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்துவதும், அவற்றிற்கான பாடதிட்டத்தை உருவாக்குவதும், அவற்றை மேற்பார்வை செய்வதும், மாநில அரசாங்கங்களின் பணிகளே ஆகும். இந்தப் பணிகளில் இந்திய அரசாங்கம் ஏன் குறுக்கிடவேண்டும்? குறுக்கிடுவது எப்படி ஜனநாயக முறை ஆகும்?

இவ்வாறாக ஜனநாயகத்திற்கு மாறான—சர்வாதிகார வாடை வீசுகிற முறைகள் பல இந்தியாவில் கையாளப்படுகின்றன. இத்தகைய முறைகளின் விளைவாக, இந்திய ஜனநாயகத்தின் சிறப்பு சிதைகிறது; புகழ் மங்குகிறது; பெருமை குறைகிறது. இத்தகைய குறைகள் யாவும் களையப்பட்டு, களங்கங்கள் அனைத்தும் அகற்றப்பட்டு, சீர்கேடுகள் எல்லாம் திருத்தி அமைக்கப்பட்டு இந்திய ஜனநாயகம், அப்பழுக்கு அற்றதாகவும் தூய்மை மிகுந்ததாகவும் விளங்க வேண்டும் என்பதே நம்முடைய ஆசை.

ஆசை நிறைவேறுமா?

வெற்றிக்கு வழி — தன்னம்பிக்கை

(ஜி. கலியராஜுலு)

வாழ்க்கையின் வெற்றியானது குறிக்கோள், தன்னம்பிக்கை, மன உறுதி ஆகிய மூன்றினையும் பொறுத்திருக்கின்றது. வெற்றி என்பது நாம் எண்ணிய எண்ணத்தை இனிது நிறைவேற்றிக் கொள்வதைத் தான் குறிக்கிறது. எனவே மனிதன் ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுக்குத் தன்னை உட்படுத்தி வாழவேண்டும். அந்தக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டால்தான் வெற்றி எய்தியதாகக் கூற முடியும். அதிலும் குறிக்கோள் என்பது உயர்ந்த ஒரு நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும். கூட்டத்தில் ஜேப்படி செய்பவனும் ஒரு குறிக்கோளுடன் தான் செயல்படுகிறான். ஆனால் அது ஒரு குறிக்கோளாக ஆகமுடியாது; வாழ்க்கையின் வெற்றியாகவும் ஆகாது. எனவே நல்ல நோக்கத்தை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். உண்மையே பேச வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டார் காந்தி அடிகள். அதனால் இன்று அவரை உத்தமர் காந்தியடிகள் என்று உலகம் பாராட்டுகிறது. ஆப்பிரிக்காவிலே ஆங்கிலேயனின் நிறவெறியினைக் கண்டார். அன்றே ஆங்கில ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்ற வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டார். அவர் கொண்ட குறிக்கோளில் வெற்றியும் பெற்றார். இதனால் அவர் இறந்தும் அவர் தம் புகழ் இழக்கவில்லை. அமெரிக்காவிலே நீக்ரோக்கள் ஆடுமாடுகளைப் போல் சந்தையிலே ஏலம் விடப்படும் அவல நிலையைத் தந்தையுடன் சென்ற ஒரு சிறுவன் கண்டான். இந்த அநாகரிகத்தை ஒழித்தாக வேண்டுமே என்று நினைத்தான். பிற்காலத்திலே அமெரிக்க நாட்டின் தலைவராக ஆனதும் அப்பழக்கத்தைத் தடை செய்தான். இப்படிச் செய்தவர் அடிமை வர்த்தகம் ஒழித்த "ஆபிரகாம் லிங்கன்" என்று இன்றும் பாராட்டப்படுகிறார். "கலிலேயோ" ஒரு துணி வியாபாரி ஆகிப்பொருள் திரட்ட வேண்டுமென்று அவர் தந்தை கட்டாயப் படுத்தினார். ஆனால் கலிலேயோ கணக்கு, மருத்துவம், தத்துவம் பயின்று விஞ்ஞானியாக விரும்பினார். அதனால்தான் 'டெலஸ்கோப்' எனும் தொலைநோக்கி, 'மைக்ராஸ்கோப்' எனும் மாபெருக்காடி ஆகியவைகளைக் கண்டு பிடித்துத் தர முடிந்தது. இவ்வாறு குறிக்கோளுடன் வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் அனைவருமே மரணத்தை வென்று வாழ்கிறார்கள்.

குறிக்கோளுடன் செயல்பட்டாலும் கூட அந்தக் குறிக்கோளை நிறைவேற்ற முனையும் போது இடையிலே ஏற்படும் இன்னல்களைச் சமாளித்துக் கொள்வதற்கான மனத்திறன் வேண்டும். இந்த மனத்திறனைத் தான் தன்னம்பிக்கை என்கிறோம். குறிக்கோள் மட்டும் வெற்றி தேடித்தர முடியாது. கொண்ட குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள, குலையாத தன்னம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்கையின்றி குறிக்கோள்களை எண்ணி வாழ்வது அஸ்திவாரத்தைப் பலப்படுத்தாமல் உயர்ந்த கட்டடத்தை எழுப்ப நினைப்பது போன்றதாகும். குறிக்கோளும் தன்னம்பிக்கையும் நம்மைச் செயல்படுத்தினாலும் கொண்ட குறிக்கோளில் அழுத்தமான பிடிப்பும் வைராக்கியமும் இருந்தால்தான் வெற்றி காண முடியும். உண்மை பேச வேண்டும் என்பது நோக்கம். ஆனால் எந்த வகைய நிலை ஏற்படினும் உண்மையே பேச வேண்டும் என்ற வைராக்கியமே மன உறுதியாகும். உயர்ந்த கட்டடத்தை அமைக்கப் பலமான அஸ்திவாரம் தேவை. அத்துடன் கட்டடம் நீண்ட நாட்கள் பாழ்படாமலிருப்பது அதன் உறுதித் தன்மையைப் பொறுத்தது. இது போலவே வாழ்வு மாளிகை உயரத் தன்னம்பிக்கை அஸ்திவாரம் ஆகிறது. அது பாழ்படாமல் இருப்பது அதன் மன உறுதியைப் பொருத்திருக்கிறது. மன உறுதியுள்ளவர்கள் எண்ணியதை எண்ணியவாறு எய்துவர், என்றார் வள்ளுவர். குறிக்கோள், தன்னம்பிக்கை மன உறுதி ஆகியவற்றில் தன்னம்பிக்கையும் வெற்றிக்கு இழுத்துச் செல்லும் ஒரு வழியாகும்.

உலகம் பலவிதம், அதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். ஒளிபொருந்திய கண்கள், உணர்ச்சி மிகுந்த பார்வை, களை தேங்கிய முகம், களிப்பு நடமிடும் உதடுகள், அஞ்சாத நெஞ்சம், "என்னதான் நடக்கும் நடக்கட்டுமே" என்று எக்காளமிடும் தன்னம்பிக்கை ஆகியவற்றுடன், "சாவு-அது ஆறிலும் உண்டு, நூறிலும் உண்டு, நாம் ஏன் அஞ்சவேண்டும் அதைக் கண்டு!!" என்று சங்க நாதமெனச் சவால் முழக்குவர் ஒரு வகையினர். இவர்கள் தன்னம்பிக்கை மிகுந்தவர்கள்.

ஒளியிழந்த கண்கள், கிலிபிடித்த பார்வை, சுருங்கிய கண்கள், வரண்ட உதடுகள், செய்வதறியாது திகைத்து நிற்கும் தயக்கம் இந்தத் தோற்றத்துடன், "வாழ்க்கையா? கொடிது, கொடிது! வாழ்க்கை கொடிது! பட முடியாது இனித் துயரம், பட்டதெல்லாம போதும்!" என்று சொல்லெல்லாம் இழுத்து நீட்டி சோக பாவத்தைக் காட்டிப் பேசுவர் ஒரு வகையினர். இவர்கள் தன்னம்பிக்கை அற்றவர்கள்.

தன்னம்பிக்கை அற்ற தன்மை இடர்ப்பாடான வழி. அது வெல்

வெட்டி விரிக்கப்பட்ட வழவழப்பான பாதை அல்ல. கார் போவதற்கு ஏற்ற தார் போட்ட பாதையும் அல்ல. சந்தேகம், சஞ்சலம், அச்சம் போன்ற, கல், முள், புதர், புற்று ஆகியன நிரம்பிய பாதை. அதிலே பயணம் செய்து வெற்றியை அடைய இயலாது.

தன்னம்பிக்கை அற்றவர்கள் தங்களைத் தாங்களே நம்புவதில்லை. தன்னம்பிக்கையின்மை மனிதரை சந்தேகப்பிராணிகளாகப் பயந்தாங்கொள்ளிகளாக, கூச்சத்துடன் கோணி, நாணி நடப்பவர்களாக தாழ்வு மனப்பான்மையால் ஒளிந்து மறைந்து ஒதுங்கி வாழ்பவர்களாக ஆக்குகின்றது இத்தகையோர் வீட்டைப் பூட்டிக்கொண்டு வெளியே புறப்படுவர். பாதி வழியிலே சென்று கொண்டிருக்கும்போது வீட்டை நன்கு பூட்டினோமா என்ற சந்தேகம் வந்துவிடும். திரும்பி ஓடிவந்து பூட்டை நான்கு முறை இழுத்துப் பார்த்து ஒரு தடவை அதைப் பிடித்துத் தொங்கிப் பார்த்து விட்டுச் சென்றால்தான் நிம்மதி ஏற்படும் ஒரு விழாவிலே சொற்பொழிவாளரின் பேச்சைக் கேட்கச் சென்றாலும், கழுத்திலே கிடக்கும் மைனர் செயினை அடிக்கடி கையினால் தொட்டுப் பார்த்துக் கொண்டேயிருப்பாரே தவிர சொற்பொழிவைச் சுவைத்துக் கேட்கமாட்டார் ஹோட்டலில் சாப்பிடச் சென்றால் வெளியே நிறுத்தி வைத்த சைக்கிள் என்னவாயிற்றோ என்று சைக்கிளில் ஒரு கண்ணும் சாப்பாட்டில் ஒரு கண்ணும் வைத்துக்கொண்டே அவசர அவசரமாகச் சாப்பிடுவார். இதனால் இவர்கள் வாழ்க்கையை ஒரு சுமையாக்கிக் கொண்டு தொல்லைப்படுகிறார்கள்.

அச்சமும் வாழ்க்கைப் பிரயாணத்தின் இடையூறுகளில் ஒன்று. அச்சம் காரணமாகத் தன்னம்பிக்கையை இழப்போர் பலர். தன்னம்பிக்கையற்றோர் அஞ்சி அஞ்சிச் சாவார். இந்த அவனியிலே இவர்கட்கு அச்சம் ஊட்டாத பொருளே இல்லை. இருட்டைக் கண்டால அச்சம்; தீயைக் கண்டாலும் தேளைக் கண்டாலும் அச்சம்; பாம்பு வீட்டிற்குள் வந்துவிட்டால், தான் ஒரு ஆண் மகன் என்பதை மறந்து பக்கத்து வீட்டுக்காரரைக் கூப்பிடு என்பார். இரவு நேரத்தில் வளைந்து கிடக்கும் பழுது, நெளிந்து வரும் பாம்பு போலத் தோன்றி நெஞ்சைக் குலுக்கும். தேர்வுக்கு முதல் நாள் தேகமெல்லாம் சூடு பறக்கும் அளவுக்கு காய்ச்சல் வரும் மேடையேறிப் பேச ஆயத்தமோடு வந்தாலும் அவையினரைக் கண்டதும் உடம்பெல்லாம் வியர்க்கும். கைகளும், கால்களும நடுங்கும். மனம் ஒன்று நினைக்கும், வாய் ஒன்று பேசும். சில நேரங்களில் பேசவிடாமல் நாக்கு சத்தியாக்கிரகம் செய்யும் எனவே, தேர்வு எழுதுவோர், மேடையில் பேச விழையும் நபர் வேலை தரும் நிலையங்களில் பேட்டிக்குச் செல்

வோர் ஆகிய அனைவரும் அச்சத்தால் தன்னம்பிக்கையை இழக்க நேரின், எடுத்த முயற்சியை இனிது நிறைவேற்றவும்கொண்ட குறிக்கோளில் வெற்றி காணவும் இயலாது.

அச்சம், அவசியமில்லாத கற்பனைகளை வளர்த்து மனத்திலே மயக்கத்தையும் செயலிலே தயக்கத்தையும் உண்டாக்கும். தேர்விலே தோல்வி ஏற்பட்டுவிடுமோ, தேர் குடை சாய்ந்துவிடுமோ, விளையாட்டில் தோற்றுவிட்டால் என்ன ஆவது, வியாபாரத்தில் நட்டம் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்றெல்லாம் மயங்கிக் கொண்டேயிருப்பர். இன்னும் சிலர் காரில் உட்கார்ந்து கொண்டு போகும் போதே காவிரிப் பாலம் உடைந்து விட்டால் என்ன செய்வது என்று கலங்குவர். பாதையிலே நடந்து போனால் பஸ் ஏறி விட்டால் என்ன ஆவது என்று பயந்து நடைபாதை ஓரத்தில் நடப்பர். நடைபாதையில் நடந்து கொண்டிருக்கும்போதே திடீமென வரும் லாரியின் ஸ்டியரிங் உடைந்து திசைமாறி விட்டால் என்ன ஆவது என்று எண்ணித் திடுக்கிடுவர். சாதாரணமாக செரிமானமின்மை காரணமாக நெஞ்சிலே சிறு தொல்லைகள் ஏற்பட்டால்கூட, முன்பு ஒரு முறை மூன்றாவது வீட்டுக்காரர் நெஞ்சு வலிக்கிறது என்று சொல்லிய சில நிமிடங்களில் மாரடைப்பால் இறந்து போன நிகழ்ச்சியை நினைத்துத்தமக்கும் அதுபோன்று மரணம்நெருங்கிக்கொண்டிருப்பதாக மருட்சியடைவார். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், ஷேக்ஸ்பியர் கூறியதுபோல் தன்னம்பிக்கையற்றவர்கள் வாழ்க்கையில் பலமுறை சாகிறார்கள். இத்தகைய அச்ச உணர்ச்சியினால் தான் சிலர் தேர்வு மண்டபத்திலே மயக்கம் போட்டு விழுகிறார்கள். வேலைக்குப் பேட்டி காணச் செல்பவர்கள் மூர்ச்சை போட்டு விழுகிறார்கள். சிலர் தேர்வு எழுதாமலும் பேட்டி காணாமலும் திரும்பி விடுகிறார்கள்.

மற்றும் சிலரிடத்திலே தாழ்வு மனப்பான்மை, கூச்சம் ஆகிய இவற்றால் தன்னம்பிக்கை அற்றுப் போகிறது. குழந்தைப் பருவத்தில் எப்போதும் பெற்றோரின் அரவணைப்பிலிருந்து பழக்கப்பட்டவர்கள் சிறிய வயதில் தன்னிச்சையான செயல்களில் ஈடுபடும்போது பெற்றோராலும் மற்றோராலும் அடித்துத் துன்புறுத்தப்பட்டவர்கள், ஒன்றுக்கும் ஆகாதவன், உருப்படாத ஜென்மம் என்றெல்லாம் இழித்தும் பழித்தும் பேசப்பட்டவர்கள், கை, கால், கண், மூக்கு போன்ற உடல் உறுப்புகளில் குறைபாடு உள்ளவர்கள் ஆகியோர் தங்களைப்பற்றி மிகவும் தாழ்வாக நினைத்துக் கொண்டு பிறரோடும் சேர்ந்து பழகமாட்டார்கள். சிரித்துப் பேசமாட்டார்கள். நம்மால் எதுவும் ஆகாது என்று நினைத்து எங்கு

முயற்சியும் மேற்கொள்ளமாட்டார்கள். எதிலும் பங்கு கொள்ளாது ஒளிந்து மறைந்து ஒதுங்கி வாழ விரும்புவார்கள். காட்டிலே மலர்ந்த மல்லிகையின் மணம், நுகருவோர் இன்றிப் பாழாவது போல, தாழ்வு மனப்பான்மை, கூச்சம் ஆகியவற்றால் தன்னம்பிக்கையற்றவர்களிடம் உள்ள அரிய திறன்கள், பிறர் அறியத் தக்க வகையில் வெளிப்படாமலேயே அழிந்து விடுகின்றன.

தன்னம்பிக்கையின்மை மனிதரைக் கோழைகளாகவும் ஆக்குகிறது. எனவேதான் தூக்குப் போட்டுக்கொண்டு, துடிதுடித்துச் செத்தார்; விஷம் அருந்திவிட்டு வேதனைப்பட்டு இறந்தார்; பத்தாயிரம் ரூபாயைப் பறிகொடுத்தவர் உடனே பைத்தியமாக மாறினார் என்பன போன்ற பரபரப்பூட்டும் நிகழ்ச்சிகள் நடக்கக் காண்கிறோம். இவர்கள் வாழ்க்கைப் பயணத்தைப் பாதி வழியிலே நிறுத்தித் தோல்வியை எதிர்கொண்டு அழைத்துக் கொள்கிறார்கள்.

சந்தேகம், சஞ்சலம், அச்சம், கூச்சம் ஆகியன உள்ளத்தைப் பற்றும் ஆபத்தான நோய்களாகும். தன்னம்பிக்கையென்னும் நன்னம்பிக்கையே இந் நோய் தீர்க்கும் நல்மருந்தாகும். இயலாதது என்ற சொல் அகராதியிலே இருக்கக்கூடாது என்று முழக்கமிட்டான் நெப்போலியன். ஊழ்வினை வலிமையுடையது தான்; ஆனாலும் மனிதன் முயன்றால் அதையும் புறங்காட்டச் செய்யலாம் என்றார் வள்ளுவர். நெப்போலியனை வீழ்த்திய ஆங்கிலக் கடற்படையின் தளபதி நெல்சன், போரிலே ஒரு கண்ணையிழந்தார். ஆனாலும் தன்னம்பிக்கையோடு போரிட்டதால் நெப்போலியனைத் தோற்கடித்தார். "உருப்படாதவன், உதவாக்கரை, ஒன்றுக்கும் ஆகாதவன், என்றெல்லாம் ஆசிரியரால் உதாசீனம் செய்யப்பட்ட டார்வின் தளர்ச்சியடையாது முயற்சியுடன் கற்றதால், பிற்காலத்தில் உயிரினத் தோற்றம்பற்றிய அரிய உண்மைகளை ஆராய்ந்து கூறும் அறிஞராக ஆனார். இடையிலே செவிடாக ஆன தாமஸ் ஆல்வா எடிசன் என்ன செய்வது என்று ஏங்கித் தவிக்காமல் நம் செவிக்கு இன்பம் தரும் கிராமபோனையும், சினிமாவையும், மின்விளக்கையும் கண்டுபிடித்துத் தந்தார். கண்குருடு, காது செவிடு, என்ற குறைபாடுகள் கொண்ட ஹெலன் கெல்லர் வாழ்க்கையிலே வெறுப்புக்கொள்ளாமல் தன்னம்பிக்கையுடன் கற்று அகில உலகப்புகழ் பெற்றிருக்கிறார். ஆயுத பலம் கொண்ட வல்லரசிடமிருந்து நம் நாட்டை மீட்பது நடக்க முடியாதது என்று சிலர் சொன்ன நேரத்தில் காந்தியடிகள் கத்தியின்றி, ரத்தமின்றி, யுத்தமின்றி விடுதலை பெற்றுத்தர காரணமாயிருந்தது அவரது தன்னம்பிக்கை என்பதை மறக்க முடியாது. எனவே, வாழ்க்கை

(13-ம் பக்கம் பார்க்க)

'வானிலை முன்னறிவிப்பு'

சில ஆண்டுகளுக்கு முன்பு தென்னாட்டில் கடும் புயலொன்று வீசி நெற்களஞ்சியமாகிய தஞ்சை மாவட்டத்திலும் திருச்சி மாவட்டத்திலும் பெருமளவில் அழிவு ஏற்படுத்தியதை நாம் அறிவோம். இத்தனைக்கும் அப்படிப்பட்டதொரு புயல் வீசப்போவது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சிக்கூடத்தார் ஒரு நாள் முன்பே அறிக்கை வெளியிட்டனர். வசதிகள் குறைந்த காரணத்தால் அந்த அறிவிப்பை நன்கு பயன் படுத்திக்கொள்ள முடியவில்லை என்றாலும் விமான, கப்பற் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன. புகைவண்டிகள் கவனத்துடன் ஓட்டிச் செல்லப்பட்டன.

போக்குவரத்து சாதனங்களும் விஞ்ஞான வசதிகளும் பெருகி நிற்கும் இன்றைய நாளிலேயே புயல்களின் அழிவை முழுவதும் தடுக்கமுடியவில்லையென்றால், புயல்கள் பூவுலகிற்கு அனுப்பப் படும் கடவுளின் கணைகள் என்று கருதி வாழ்ந்த அன்றைய நாட்களில் அவை ஏற்படுத்திய அழிவு அதிகமாகத்தான் இருந்திருக்கும்.

ஒவ்வொரு முறையும், புயல் வீசும்பொழுதும், மழை பெய்யும்பொழுதும் மனிதன் சில உண்மைகளைக் கண்டான் மாறாத சில புயற் குறிகளையும் மழைக் குறிகளையும் ஒவ்வொரு முறையும் கண்டுவந்தனர். என்றாலும் மழையையும் புயலையும் முன் கூட்டியே அறிவிக்கும் திறன் சென்ற நூற்றாண்டின் இறுதியில் தான் ஏற்பட்டது.

சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் அடிக்கடி புயல்களினால் அழிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. எல்லோரும் வானிலையைப்பற்றிப் பேசினார்களே தவிர, நேரத்தைச் சிந்தனைக்குச் செலவிடவில்லை. வான நிலைகளைப்பற்றி, ஆராய்ந்து, உண்மை கண்டு, பெரும் — வெற்றிபெற்றவர் லாப்காம் என்ற அறிஞரா

12-ம் பக்கத் தொடர்ச்சி

யில் வெற்றிபெறத் தன்னம்பிக்கையே தகுந்த வழி.

இதனால்தான் இன்றையநெருக்கடியைக் குறித்து இந்தியப் பிரதமர் பேசுகிற நேரத்தில் பல்வேறு நாடுகளும் நமக்கு உதவுவதன் மூலம்நம்முடையபடைபலத்தைப் பெருக்கிக்கொண்டாலும் அதைவிட நெறியற்ற, நேர்மைத் திறமற்ற எதிரிகளின் தொல்லைகளைக் கண்டு நம்பிக்கை இழக்காது நம்மைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய மனபலமே நமக்கு முதன்மையாக வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

—வானொலி

-வார். தாம் கண்டுபிடித்த உண்மைகள், உலகம் பயனடைய உபயோகப்படுத்தப் பட்டதைத் தனது வாழ்நாளிலேயே கண்டார். அவருடைய திட்டங்களும், வழிகளும் அமெரிக்க அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப் பட்டதோடு, முக்கியப் பயிர்களிலிருந்து லட்சக்கணக்கான டாலர்களை சேகரிக்க உழவர்களுக்கு உதவிற்று, எண்ணற்ற கப்பலோட்டிகளைக் காப்பாற்றியது.

செடியின் நூல் அறிஞராகவும், இயற்கை நூல் மாணவராகவும் திகழ்ந்த லாப்காம் வான் நிலைபற்றி அறிவதில் மிகுந்த விருப்பங்கொண்டிருந்தார். தமது பதினாறாவது வயதில் நில உட்கூற்றியல் பற்றிய நூல் ஒன்று வெளியிட்டார். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு ஒகியோ கால்வாயின் பொறியியல் அதிகாரிக்கு உதவியாக வேலைக்குச் சென்றார்.

பொருள் சேர்ப்பதில் விருப்பங்கொள்ளாத லாப்காம், 1836-ல் வேலையை உதறிவிட்டு வெளியேறினார். ஒரு மாநிலத்தின்மீது ஏற்படும் இயற்கை நிகழ்ச்சிகளை, அறிவியல் அறிஞர் பலர் கவனஞ்செலுத்தாதிருந்தகாலத்தில், குறிப்பெடுத்து ஆராய்வதில் பயனுண்டு என்று எண்ணங்கொண்டார். மிச்சிகன் பகுதியிலுள்ள மில்வாக்கி என்ற இடத்தில் தனது ஆராய்ச்சிகளைத் தொடங்கினார். ஒவ்வொரு நாளின் வெப்ப நிலைகள், மழை அளவுகள், காற்றின் வேகம் அது செல்லும் திசை — இவைகளைக் குறித்துக்கொண்டு ஆராய்ந்தார்.

மிச்சிகன் ஏரி நீர் மட்டத்தின் ஏற்ற இறக்கங்களை ஆராய்ந்த முடிவிலிருந்து வானிலையை முன் கூட்டியே அறியக்கூடுமென்பதோடு, தேவையான காலத்திற்குள் அறிந்து, உயிர்களையும் பொருள்களையும் அழிவேதுமின்றிக் காப்பாற்றவும் இயலும் என்பதை மெய்ப்பித்துக்காட்டினார்.

1859-ல் மிச்சிகன் ஏரிப்பகுதியை அழித்த புயலின் பாதையை—முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்பகுதியான டெக்சாசைத் தாக்கிப், பின் வடக்கு நோக்கி நகர்ந்து பின் கிழக்கு நோக்கித் திரும்பி மிச்சிகன் ஏரியை 24 மணி நேரத்தில் அடைந்து, அட்லாண்டிக் மாகடலை இரு நாட்களில் கடந்து மூன்றாவது நாளில் நோவாஸ்கோஷியாவைச் சேரும் என்று—கூடுமான அளவு சரியாக வகுத்ததற்குப் பின், லாப்காம் தன் ஆராய்ச்சியினைப் பயன் அளிக்கக்கூடிய வகையில் செயலாற்ற முன் வந்தார்.

அரசாங்கச் சலுகைக் தனக்குக் கிட்டாது என்றெண்ணிய லாப்காம், தனது ஆராய்ச்சியினைத் தொடர்ந்து நடத்துவதற்கான பொருள் வசதிக்காக டெட்ராய்ட்—மில்வாக்கி இருப்புப் பாதைக் கூட்டுக் குழுவினரிடம்

உதவி வேண்டினர். இக்குழுவினர் நீர்வழிப் போக்குவரவுகளைக் கொண்டிருந்தால் வானிலை ஆராய்ச்சிகளின் பயனைத் தெளிவுபட எடுத்துக் கூறினர். வானிலை ஆராய்ச்சியைவிட, பெரிய சேவகமான நீராவிப் படகுகளிடமே நம்பிக்கை கொண்டிருப்பதாகக், கூட்டுக்குழுவினர் லாப்காமுக்கு அறிவித்தனர்.

ஒரு முயற்சி கிடைத்தால் தனது வானிலை அறிவிப்புக்கான திட்டங்கள் நிச்சயம் வெற்றி பெறும் என்று நம்பிய லாப்காம் எதற்கும் கலங்கவில்லை.

வணிகர்களையும், பாங்கிக்காரர்களையும், கப்பற் சொந்தக்காரர்களையும் கண்டுபேசி தனது திட்டங்களின் உண்மையை விளக்கினர். யாரிடமிருந்தும் உதவி கிடைக்கவில்லை, லாப்காமுக்கு பேட்டிகூட தர மறுத்தனர்.

டெட்ராய்ட் ஏரிப் பகுதித் தலைவன் லாப்காமுக்கு மதிப்பு தர மறுத்ததோடு "இந்த வானிலை ஆராய்ச்சித்தாள்களைக் கவனித்துப்பார்க்க எங்களுக்கு நேரமில்லை. தவிரவும் மாறும நிலையிலுள்ள தட்பவெப்ப நிலைகள் எந்த விதிகளுக்கும் அடங்கும்; அதன் துணை கொண்டு கப்பலோட்டிகள் பயன்பெறும் வகையில் வழிகாட்டப்படுவர் என்ற கருத்தை நாங்கள் ஏற்கத் தயாராக இல்லை" என்று கூறி அனுப்பிவிட்டார்.

ஏறாத இடங்கள் இல்லை, பார்க்காத பெரிய மனிதர்கள் இல்லை. உதவி எங்கிருந்து கிடைக்கும் என்று ஏங்கிக்கிடந்த லாப்காமுக்கு ஒரு நண்பனின் சந்திப்பு மிகுந்த வெற்றியைத் தந்தது. ஹால்டன் என்ற அந்த நண்பர் அப்பொழுதுதான் நாட்டு வர்த்தகக் குழுவின் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டிருந்தார். ஒரு தெருமுனையில நின்று பல மணி நேரம் பேசி ஹால்டனை தனது வாய்மையால் கவர்ந்து வானிலை ஆராய்ச்சிக் கூடங்களின பயனைப் பற்றிப் பெரிதும் விளக்கினர்.

லாப்காமின் ஆர்வத்தைக் கண்டு வியந்த ஹால்டன் தனது வணிகக்குழுவினமூலம் அரசாங்கத்தை அணுகி உதவி கேட்கச் செய்த முயற்சியில் வெற்றிபெற்ருர்.

1870-ம் ஆண்டில் "வானிலை முன்னறிவிப்பின்" திட்டங்கள் சட்டசபைமுன் வைக்கப்பட்டது. லாப்காம் வீரமுழக்கம் செய்து, அது வரை 1914 கடல் விபத்துக்களுடன் சுமார் 40 லட்சம் டாலருககு மேல் ஏற்பட்ட அழிவையும் எடுத்துக்காட்டி வானிலையை முன் கூட்டி அறிவிக்கக்கூடிய வகையில் வானிலை ஆராய்ச்சிக்கூடங்கள் ஏற்படுத்துவதின் அவசியத்தை விளக்கினர். வானிலை ஆராய்ச்சிகளைப்பற்றிய குறிப்புக் தாள்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டன.

திட்டத்திற்கு காங்கிரசின் அனுமதி கிடைத்தது. 1870-ல்

அதற்குத் தனிச் சட்டமும் இயற்றப்பட்டது. நாடெங்கும் உள்ள இராணுவ நிலையங்களில் வானிலை ஆராய்ச்சிக்கூடங்கள் ஏற்படுத்த இராணுவ அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. 1870-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 1-ம் நாள் காலை 7-35-க்கு முதல் வானிலை அறிக்கைகள் இரு கூடங்கள் மூலம் படிக்கப்பட்டு ஒலிபரப்பப் பட்டது.

தனது திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட பின் லாப்காம் மற்ற ஆராய்ச்சிகளுக்குத் திரும்பினார். அரசாங்க அதிகாரிகளின் வற்புறுத்தலுக்கிணங்கி, சிகாகோ வானிலை ஆராய்ச்சிக்கூடத்தில் வேலையில் அமர்ந்தார்.

வானிலை அறிக்கைகளை வெளியிடுவதின் முக்கியத்தைச் செய்தித்தாள் ஆசிரியர்கள் உணர்ந்தனர். வானிலை ஆராய்ச்சிக் கூடங்களும் செய்தித்தாள்களை, "தாம் கவனித்தறிந்த வானிலைக் குறிப்புகளை" நாடெங்கும் அறிவிக்கப் பயன்படுத்திக் கொண்டன. இன்று வானிலை அறிக்கையை வெளியிடாத செய்தித்தாள்களே இல்லை. 'வானிலை முன்னறிவிப்பின்' தந்தையான லாப்காம் 1875-ம் ஆண்டு இறந்தார். ஆனால் அவர் வகுத்த முறை அழியவில்லை. தினந்தோறும் செய்தித்தாள்களில் தோன்றும் வானிலை அறிக்கைகள் லாப்காமின் பெருமையை உணர்த்தி நிற்கின்றன.

—மன்றம்

மதுரை மாநாடு

கனம் கல்வி மந்திரி திரு. பக்தவத்சலம் அவர்கள் அமெரிக்காவுக்குச் சென்று சமீபத்திலதான் சென்னை திரும்பினார். ஆதலால் கல்வி மந்திரியுடன் கலந்து ஆலோசித்து அடுத்த ஜூலை மாதம் மாநாட்டை நடத்த ஆவன செய்துகொண்டிருக்கிறோம். அமைச்சர் வரும் தேதியை அறிவித்தவுடன் மாநாட்டுக்கு அழைப்பு அனுப்பி வைக்கப்படும்.

பி. வீரராகவன்,

தலைவர், சென்னை மாநில எய்டட் பள்ளி நிர்வாகிகள் சங்கம்.

9–வது வகுப்பிலிருந்துதான் ஹிந்தியைப் போதிக்க வேண்டும்

திரு. பக்தவத்சலம் வலியுறுத்தல்

பள்ளி வேலை நாட்கள் அதிகரிப்பை ஏற்க வேண்டுகோள்

பரீட்சை முறை பற்றி மறுபரிசீலனை அவசியமென்கிறார்.

பரீட்சைகளில் ஏராளமான மாணவர்கள் தோற்கும் காரணங்களைத் தீவிரமாக ஆராயுமாறு ஆசிரியர்களைக் கல்வி மந்திரி எம். பக்தவத்ஸலம் கேட்டுக் கொண்டார் அத்தகைய பெருமளவுத் தோல்விகள் தேசியவிரயம் என்றார் அவர்.

63வது சென்னை ராஜ்ய கல்வி மாநாட்டைக் கோயமுத்தூரில் 16-5-63 அன்று அவர் துவக்கிவைத்தார் அத்தகைய தோல்விகளைத் தவிர்ப்பதற்காகக் குறைந்த பட்ச மார்க்குகளைக் குறைக்க வேண்டுமெனடில்லியில் கூறப்பட்டது என்று அவர் சொன்னார். அந்த யோசனையை மந்திரி எதிர்த்தார். அதுகுறைந்த தரத்தை ஸ்திரப்படுத்துவதாகும் என்றும் பரீட்சிப்போரைக் கண்டிப்பதாகும் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய நிலையில் மாணவர் திறனைச் சோதிக்க வேறு ஏற்பாடு இல்லாததால், போதனைத் தரத்தை அபிவிருத்தி செய்ய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றார் அவர். விரயத்தைத் தவிர்ப்பதற்காகத் தற்போதைய பரீட்சை முறை பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்

வேலை நாட்கள்

வேலை நாட்களை 200லிருந்து 220க்கு அதிகரித்து, கல்வி வருடத்தில் 1200 மணி நேரம் வேலை நடக்கும் யோசனையை ஏற்குமாறு ஆசிரியர்களைத் திரு பக்தவத்ஸலம் கேட்டுக் கொண்டார் மற்றெல்லா ராஜ்யங்களும் இன்னும் அதிக வேலை நாட்களுக்கு ஒப்புகொண்டு இருப்பதாகவும், இந்த யோசனையை ஏற்காவிடில் அவர்களுக்கும், ராஜ்யத்துக்கும் தீங்காகும் என்றும் அவர் சொன்னார். 6 வாரம் கோடைவிடுமுறையும், இருவாரம் தசரா விடுமுறையும், இருவாரம் கிறிஸ்துமஸ் விடுமுறையும், 14 திருவிழா விடுமுறைகளும், 61 ஞாயிறு விடுமுறைகளும், கடைசிக்கு முந்திய சனி விடுமுறைகளும் கிடைக்கும் என்றார்.

கல்வியை யூனியன், ராஜ்ய பொது விஷயமாக்கும் யோசனைகளை அவர் எதிர்த்தார். ஆனால்

விவாதம்மூலம் கல்வி விஷயங்களில் தேசியக் கொள்கைகளை உருவாக்குவதை அவர் வரவேற்ருர்.

முதியோர் கல்வி

யூனியன் சர்க்கார் யோசனையின பேரில், முதியோர் கல்வித் திட்டத்தை மீண்டும் கொண்டுவர ராஜ்ய சர்க்கார் உத்தேசிக்கிறது என்றும் ஆனல் 14 முதல் 30 வயதுவரை உள்ளவர்களுக்குத் தான் அது அமல் செய்யப்படும் என்றும் அவர் கூறினர்.

ஹிந்தி

மந்திரி மேலும் கூறியதாவது: ஹிந்தி போதனையைக் கட்டாயமாக்கக் கூடாது. ஆனல் இந்தத் தேசிய மொழியைக் கற்பதைத் தவிர்க்க முடியாது. அது போதிக்கப்படுவதால் தென் இந்திய மாணவர்களின் நலன் பாதிக்கப்படாது.

ஒன்பதாவது ஸ்டாண்டர்டிலிருந்தான் ஹிந்தியைப் போதிக்க வேண்டும். இந்த முடிவை மாற்ற முடியாது.

சமஸ்கிருதம்

சமஸ்கிருதக் கல்விக்கு ஊக்கமளிப்பதை ஆதரிக்கிறேன். அதற்கான நடவடிக்கையாகசமஸ்கிருதம் ஒரு இஷ்ட பாடமாக்கப்பட்டிருக்கிறது. ஆனல் ஆருவது ஸ்டாண்டர்டிலிருந்து சமஸ்கிருதத்தைத் கொண்டு வரும் யோசனையை ஏற்க முடியாது. ஏனென்ருல் தமிழ்க் கல்வியை அது பாதிக்கும்.

பாட புத்தகங்கள்

பாட புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதை சர்க்கார் ஏற்கும் திட்டத்தை சுயநலமிகள் எதிர்ப்பது வருந்தத்தக்கது. இத்திட்டப்படி ஆட்சேபகரமான பாடங்கள் மாணவர்களிடம் கிடைப்பது தடுக்கப்படுவதுடன், தேசிய ஒருமைப்பாட்டுக்கான விஷயங்கள் அதில் சேர்க்கப்படும்.

உற்பத்தித் திறனை அதிகரிக்க மாணவர்கள் உதவுவதற்காக ஒவ்வொரு ராஜ்யத்திலும் சில பள்ளிக் கூடங்களில் முன்னோடித் திட்டம் ஒன்றைக் கொண்டுவர இந்திய சர்க்கார்உத்தேசிக்கிறது. தற்போதைய கல்வி முறைக்குத் தொழில் சார்பு இருக்க வேண்டும் என்று இந்திய சர்க்கார் கருதுகிறது.

உழைப்பின் கண்ணியத்தை மாணவர்களுக்குப் புகட்ட வேண்டும். பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் காய்கறி வளர்ப்பது, அவர்களுக்கு மன மகிழ்ச்சியை அளிக்கிறது.

கிராமங்களில் பெரும் விழிப்பு ஏற்பட்டுள்ளது. தங்கள் குழந்தைகள் உயர் கல்விபெற வேண்டும் என்று அவர்கள் விரும்புகிருர்கள். சென்னை ராஜ்ய ஆசிரியர்களின் சிறந்த மரபையும் தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் ஆக்க பூர்வ பணியையும் அவர் பாராட்டினர். ஆசிரியரும், சிறு

சேமிப்புத் திட்ட ஏஜண்டுமான திரு. வி.என். ஜெகன்னாதனுக்கு சிறு சேமிப்பில் முதன்மையாக இருந்ததற்காக அவர் ஒரு பதக்கம் வழங்கினார்.

கோயமுத்தூரில் சர்வகலாசாலை ஏற்படும்

திரு. சுந்தரவடிவேலு நம்பிக்கை

பரீட்சைகளில ஏராளமான தோல்விகள் ஏற்படுவதன் விளைவாக ஏற்படும் விரயத்தைத் குறைக்க ஆரம்ப வகுப்பு முதல் தீவிர நடவடிக்கை எடுக்குமாறு கல்வியாளர்களைக் கல்வி இலாகா டைரக்டர் என். டி. சுந்தரவடிவேலு கேட்டுக் கொண்டார். மெதுவாகக் கற்பவர்களைக் களையெடுப்பதில் முனையாமல் மாணவர்களுக்குச் சரியான வழியில் கல்வி புகட்டுவதில் ஈடுபடுமாறு ஆசிரியர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

ஆரம்பப் பள்ளிகளில் அவசியமானால் பள்ளி நேரத்துக்குப் பிறகு சிறிது நேரத்தை மேல் வகுப்புக்குப் போவதற்கு அவர்களைத் தயார்படுத்துவதற்குப் பயன்படுத்துமாறு ஆசிரியர்களை அவர் கேட்டுக் கொண்டார். அத்தகைய முறைகளால் தான் உண்மையாகக் கல்வியைப் பரப்ப முடியும் என்றார் அவர்.

கல்விப் பொருட் காட்சியைத் திறந்து வைத்துவிட்டு 53வது சென்னை ராஜ்யக் கல்வி மாநாட்டு நினைவு நூலை வெளியிட்ட பிறகு மாநாட்டில் அவர் பேசினார்.

மாநாடு சம்பந்தப்பட்ட முதல் நிகழ்ச்சியில் ராஜ்யம் முழுவதிலுமிருந்து 1000க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்

கொயமுத்தூரில் ஒரு சர்வகலாசாலை ஏற்படுத்துவதன் அவசியம்பற்றித்திரு சுந்தரவடிவேலு குறிப்பிட்டார். அது நியாயமான கோரிக்கை. ஏனென்றால் கோயமுத்தூரைப்போல அவ்வளவு கல்வி ஸ்தாபனங்களும், ஆராய்ச்சிக் கழகங்களும் வேறு எந்த நகரிலும் இல்லை என்று அவர் சொன்னார். கோயமுத்தூரிலும் விரைவில் சர்வகலாசாலை ஏற்படும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

டைரக்டரையும் மற்றவர்களையும் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஜி. ஆர். தாமோதரன் வரவேற்றார்.

தலைமையுரை

வியாழக்கிழமை யன்று மாநாட்டில் ராமநாதபுரம் ராஜா ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் எம். ராஜா அய்யர் எம். எல். சி. தலைமையுரை நிகழ்த்தினார். அடுத்த கல்வியாண்டிலிருந்து அமலாகும் 11 வருட கல்வி திட்டம் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும் என அவர் சொன்னார். செக்கண்டரி கல்வியை சர்வ கலாசாலைக் கல்விக்கு

வெறும் தயாரிப்பெனக் கருது வது தவறு என்றும், அது வாழ்க்கைக்குத் தயாரிப் பாக இருக்க வேண்டும் என்றும் இக் கண்ணோட்டத்தில் 11 வருட கல்விமுறை மாணவர்களுக்குப் பயனுள்ளது என்றும் அவர் கூறினார்.

தாய்மொழி போதனை மொழி யாக இருக்கவேண்டும என்றும், ஆனால் ஆங்கிலம் கற்பதைத்தான் எதிர்க்கவில்லை என்றும் அவர் சொன்னார்.

தற்போதுள்ள பள்ளிகளின் திறமையை அதிகரிப்பதற்காக செகண்டரி கல்வியை மேற் கொண்டு விஸ்தரிப்பதைத் தற் காலிகமாக நிறுத்த வேண்டு மென்று அவர் கருதினார்.

ஆசிரியர்களின் ஓய்வு வயதை உயர்த்த வேண்டுமென்றும், ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்—மாணவர் விகிதத்தையும் உயர்த்த வேண்டும என்றும் அவர் கூறி னார்.

அவசர நிலை மாணவர்களின் தேக ஆரோக்கியத்தை வலியுறுத் துவதால் ஆரம்பப் பள்ளிகளில் வைத்திய பரிசோதனை நடத்தப் பட வேண்டும் என்று அவர் கூறி னார்.

மாணவர்களின் குணத்தை உரு வாக்கும் ஆன்மீக அம்சத்தை அவர் வலியுறுத்தினார்.

ஆசிரியர்களுக்கு வேலைப் பாது காப்பும் அவர் வேலையில் தலையீ டற்ற சுதந்திரமும் இருக்க வேண் டும் என்று அவர் கோரினார். ஆசிரியர்களுக்குப் பாதுகாப்ப ளிக்கச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றார் அவர்.

அறிவுச் சுடர்கள்

நாள் ஒன்றின் இயல்பை விடியற்காலம் விளக்கும். அதுபோல மனித வாழ்க்கையின் இயல்பைக் குழந்தைப் பருவம் விளக்குகிறது.

—மில்டன்

பத்தாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கப் போவதாகக் கருதி வாழ்க்கையை நடத்த வேண்டாம். மரணம் நிச்சயம். எனவே செய்ய வேண்டிய உயரிய பணிகளை விரைவாகச் செய்து முடி.

—மார்க்க அரேலியர்

எப்பொழுதும் கீழே விழாமல் இருப்பது புகழுக்கு உரிய தல்ல. விழும்பொழுதெல்லாம் விழித்தெழுவதுதான் பெரும் புகழ் பெறுவதற்கான சிறந்த வழி.

—கன்பூசியஸ்

திருக்குறள் விளக்கம் :

வெகுளாமை

(புலவர் தணிகை உலகநாதன்.)

வேலன் ஒரு தொழிலாளி. கையில் கருவிகளை வைத்துக் கொண்டு தன வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தான். அவன் குழந்தை ஒரு குறும்புக்காரக் குழந்தை. எப்பொழுது பார்த்தாலும் அவனிடம் ஏதாவது பேசிக்கொண்டும் அழுது கொண்டும் தொந்தவை செய்து கொண்டே இருந்தது. வேலனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. குழந்தைதானே என்று கூடப் பார்க்கவில்லை. அதை அப்பால் தள்ளினான். கையில் இருந்த உளி குழந்தையின் மூக்கில் பட்டுவிட்டது. நல்ல காயமும் ஏற்பட்டதால் குழந்தை 'கோ' வென்று கதறி அழுதது. பிறகு தான் வேலனுக்குக் குழந்தையிடம் இரக்கம் ஏற்பட்டது. குழந்தையைப் பரிவுடன் எடுத்துவைத்துக் கொண்டு கதைகள் பல சொல்லி, ஒருவாறு சமாதானப் படுத்தினான். குழந்தையின் அழுகையும் ஒருவாறு ஓய்ந்தது. ஆனாலும் மூக்கில் பட்ட காயம் என்றும் மாறாமல் ஆறாத வடுவாகி விட்டது. இப்படிப் பட்ட தன்மையில்தான் பெரியவர்கள், 'சினத்தால் அரிந்த மூக்கு சிரித்தால் ஒட்டுமா'' என்று கூறுகிறார்கள். சினத்துக்கு வேறு பெயர் வெகுளி. அதனைக் கொள்ளாமல் இருப்பதே வெகுளாமை எனப்படும். மனிதனுக்கு நேரக் கூடிய தீக்குணங்களில் வெகுளி என்பது மிகவும் கொடுமையானதாகும். சினம் எப்போது உண்டாகிறது' ஒருவன் அடைய விரும்பும் பொருள் கைகூடாத காலத்திலும், ஒருவன் விரும்பும் பொருளுக்குப் பிறர் கெடுதி செய்யும் நேரத்திலும் சினம் உண்டாகிறது. தீய குணங்களின் சிகரமாகிய இச்சினத்தை ஒழிப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் பொறுமை. 'உள்ளம்கவர்ந்து எழுந்தோங்கு சினம் காத்துக் கொள்ளும் குணமே குணமென்க'' என்று புலவர் கூறுவர்.

ஒருவன் தன்னைவிட வயது, வலிமை, செல்வாக்கு முதலியவைகளால் தாழ்ந்தவர்களிடம் கோபம் உண்டாகாமல் தடுத்துக் கொள்ள வேண்டும் அத்தகையவனே சினம் காக்கும் செம்மல் ஆவான். தன்னைவிட வயது, வலிமை, செல்வாக்கு, முதலியவற்றால் உயர்ந்தவர்கள் மீதும் சினம் தோன்றக் கூடும். ஆனால் அச்சினம் ஒன்றும் பலிப்பதில்லை.

அப்படிப்பட்ட கோபத்தைத் தடுத்தும் பயனில்லை. ஆகையால் சினம் பலிக்கும் இடத்தில் தடுத்துக் கொள்பவனே சினம் காப்பவன். இக்கருத்தைத் திருவள்ளுவர்,

"செல் இடத்துக் காப்பான் சினம்காப்பான் அல் இடத்துக்
காக்கின் என்? காவாக்கால் என்?"

என்னும் குறளில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

சுண்டெலியொன்று சிங்கத்தைக் கண்டு சீற்றம் கொண்டால் அந்த எலி என்ன கதியை அடையும்? அதுபோல ஒருவன் தன்னைவிட வலிமையுடையவர்கள் மீது சினம் கொள்ளுதல் தனக்கே தீமையை அளிக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தவிர, தன்னைவிட மெலியவர் மீது சினம் கொண்டாலும் உலகத்தார் அவனை, 'இது ஒரு பெரிய வீரமா?' என்று இகழ்வார்கள். எனவே ஒருவன் செல்லாத இடத்தில் சினம் கொள்வது தனக்கே துன்பத்தை விளைக்கும்; பலிக்கும் இடத்தில் சினம் கொள்ளுவதைப் போன்ற கொடியசெயல் வேறு ஒன்றும் இல்லை என்று விழுமிய கருத்தை,

"செல்லா இடத்துச் சினம்தீது; செல்இடத்தும்
இல் அதனின் தீயபிற."

என்னும் குறளில் சிறப்புறக் கூறியுள்ளார் செந்நாப்போதார். இதனால் வலியோரோ, மெலியோரோ எவரிடத்தும் சினம் கொள்ளாமல் இருப்பதே நல்லது என்பது நன்கு புலப்படுகிறது.

சினமே தீமைகளுக் கெல்லாம் பிறப்பிடம். இப்படிப் பட்ட பொல்லாத சினத்தை நெஞ்சில் வைத்துக் கொள்ளாமல் மறந்தே விடுவது நல்லது. அதனால் தப்பித் தவறிக்கூடச் சினம் இல்லாமல் போகும் அல்லவா? இதைப் பற்றித் திருவள்ளுவர் என்ன சொல்கிறார் கேளுங்கள்:

"மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனால் வரும்"

என உறுதியாகக் கூறுகிறார் வள்ளுவனார்.

ஒருவனுக்குச் சினம் மூண்டபோது அவன் முகத்தில் தோன்றும் மலர்ச்சியும் எங்கோ மறைந்துவிடுகிறது அகத்திலே தோன்றும் மகிழ்ச்சியும் அடியோடு நீங்கிப் போகின்றது! இப்படிச் சினமானது முகம் மலர்ந்து சிரிப்பதையும் அகம் மலர்ந்து இன்பம் அடைவதையும் அழிக்கின்றது. ஆகையால் சினத்தைவிடக் கொ

டிய பகை என்ன இருக்கிறது என்று கேட்கிறார் செங்நாப்புலவர். அன்றியும் பகைவரிடமிருந்து ஒருவன் தன்னைக்காத்துக் கொள்ள விரும்பினால் சினம் உண்டாகாமல் தடுத்துக்கொள்ள வேண்டும் அப்படிக் காக்கத் தவறினால் சினமானது மற்றவரை அழிப்பதைவிடத் தன்னையே அழித்துவிடும்.

"நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற"

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்."

என்னும் குறள்மணிகளால் நாம் இவ்வுண்மைகளை நன்கு அறியலாம்.

சினத்தின் கொடுமைகளை யெல்லாம் எண்ணிப் பார்த்த வள்ளுவர் பெருமான் அதற்கு ஓர் அழகான உதாரணத்தைக் கொடுக்கிறார். ஒரு நெருப்பு. நெருப்பு அது சேர்ந்துள்ள இடத்தை மட்டுமே அழிக்கும். சினம் தன்னை உடையவர்களை அழிக்கும். அது மட்டுமா? துன்பமாகிய கடலில் மூழ்கியிருக்கும் அவர்களுக்குத் தெப்பம் போல உதவி அவர்களை வருத்தம் அடையாமல் காப்பாற்றும் அவருடைய இனத்தாரையும் அழிக்கும் நெருப்பு தான் சேர்ந்த இடத்தை மட்டுமே அழிக்கும் சினமாகிய நெருப்போ தனக்கு இனமானவரையும் அழிக்கும் என்றமையால் அதைவிட இது கொடுமையானது என்று தெரிகிறதல்லவா? இதைத்தான் வள்ளுவர்,

"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்"

என்றார். "கல்லைக் குத்தினால் கைதான் நோகும்" என்பது ஒரு பழமொழி. இதையும் உதாரணமாகக் கொண்டு நம் வள்ளுவர் ஓர் அரிய நீதியை எடுத்துக் கூறுகிறார். சினத்தை ஒரு பொருளாக மதிக்கவே கூடாது ஒருவன் ஆற்றலைப் பிறர் அறியவேண்டும் என்பதற்காகச் சினத்தைப் பயன் படுத்தினாலும் அது அவனுக்கே கேடு விளைக்கும். தரையைக் கையினால் ஓங்கி அறைந்தவனுடைய கை, தரையில் பட்டுத் துன்பம் அடைவது தவறாது; அதுபோலவே தன் வலிமையைக் காட்டுவதற்குக் கோபத்தைக் கருவியாகக்கொண்டவன் தவறாமல் துன்பம் அடைவான் என்பதனை,

"சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு,
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று."

என்ற குறளின் வாயிலாகக் கூறுகிறார்.

உலகைத் திருத்திய உத்தமராகிய சாக்ரடீஸின் மனைவி பொல்லாத கோபக்காரி. அவள் எத்தனைதான் வைதாலும் அவர் எள்ளளவும் ஆத்திரம் அடைவதில்லையாம். ஒரு சமயம் அவள் தன் கணவனிடம் அளவுக்கு மிஞ்சிக் கோபம் காட்டினாளாம். அப்போதும் சாக்ரடீஸ் ஏன் என்று கேட்கவில்லை. முடிவில் ஒரு குடத்தில் தண்ணீர் கொண்டுவந்து அவரது தலையில் கொட்டினாள். அதைக் கண்டவர்கள் "என்ன இது?" என்று கேட்க, சாக்ரடீஸ், "அன்பர்களே! முன்னே இடி இடித்தது; இப்போது மழை பெய்கிறது" என்று பொறுமையோடு சொல்லிச் சிரித்தாராம். தம் மனைவி கட்டுக்கடங்காமல் வைததை 'இடி இடித்தது' என்றும், தலைமீது தண்ணீர் கொட்டியதை 'மழை பொழிந்தது' என்றும் சாக்ரடீஸ் நயமாகக் கூறியது நமக்கும் சிரிப்பைத் தருகிறதல்லவா?

அருள் வள்ளலாகிய ஏசுநாதர் மீது பகைவர் பாம்பாகச் சீறினார்கள்; புலியாகப் பாய்ந்தார்கள்; கழியால் அடித்தார்கள்; காரி உமிழ்ந்தார்கள்; முள் முடியைத் தலையில் அழுத்தினார்கள்; சிலுவையில் அறைந்தார்கள். அவ்வளவு துன்பங்களையும் கருணைக் கடலாகிய ஏசுநாதர் பொறுத்துக்கொண்டு, கடவுளை நோக்கி, "தந்தையே! இவர்கள் அறியாமல் செய்யும் பிழையை மன்னிக்க வேண்டும்" என்று தியானித்தார்.

உலகம் போற்றும் உத்தமராகிய காந்தி மகானும் பொறுமை என்னும் நகையணிந்து பெருமை பெற்ற அருள் வள்ளல். அவருடைய உள்ளத்தைச் சித்திரிக்கப் புகுந்த நாமக்கல் கவிஞர்,

"குத்தீட்டி ஒருபுறத்தில் குத்தவேண்டும்;
கோடாரி ஒரு புறத்தைப் பிளக்க வேண்டும்;
ரத்தம்வரத் தடியடியால் ரணமுண் டாக்கி
நாற்புறமும் பலர் உதைத்து நலியத் திட்ட
அத்தனையும் நான்பொறுத்தே அஹிம்சை காத்தும்;
அனைவரையும் அதைப்போல நடக்கச் சொல்லி
ஒத்துமுகம் மலர்ந்(து) உதட்டில் சிரிப்பினோடும்
உயிர்துறந்தால் அதுவேஎன் உயர்ந்த ஆசை"

என்று நம் உள்ளமுருகப் பாடியுள்ளார். தீமை செய்தவர்க்கும் நன்மை செய்ய வேண்டும் என்பது வள்ளுவர் கொள்கை. ஆகையால் பல சுடர்களையுடைய பெரிய நெருப்பு தன்னைச் சூழ்ந்து வருத்தும் துன்பத்தைப் போன்ற கொடிய துன்பங்களை ஒருவன் செய்தாலும் அவன்மீது சினங்கொள்ளாமல் இருத்தல் ஒருவனுக்குக் கூடுமாயின் அதுவே சாலச்சிறந்தது என்பதை,

"இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று"

என்று கூறியுள்ளார். ஒருவன் மனத்தால் சினத்தை ஒருபோதும் நினையாதவனாயின், அவன் எடுத்த காரியம் யாவையும் எளிதாக நிறைவேறும் என்பதை நம் தெய்வப் புலவர்,

"உள்ளிய தெல்லாம் உடன் எய்தும், உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்"

என்றார். முடிவாகச் சினம் உடையவர் உயிருடையவரேயானாலும் செத்தாரோடு ஒப்பர்; சினத்தைத் துறந்தவர் துறவிகளுக்கு ஒப்பாவர் என்பதை,

" இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை"

என்னும் இறுதிக் குறளால், அறியலாம். இப்படி அறிவுக் களஞ்சியமாகிய திருக்குறளில், வெகுளாமை எனனும் அதிகாரத்தில் சினம் உடையார் அடையும் தீமைகளும் சினமில்லாதவர்கள் அடையும் நன்மைகளும் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

திருக்குறள் நம் வாழ்க்கைத் துணை நூல். புகைவண்டியானது ஒழுங்காகச் செல்ல இரட்டையாக உள்ள தண்டவாளங்கள் உதவுவதுபோல நம் வாழ்க்கை நன்னெறியில் செல்ல இரண்டு வரிகளாலான திருக்குறட்பாக்கள் உதவுகின்றன. திருக்குறள் வெகுளாமையின் விளக்கம் கண்ட நாம் இனி, சினமில்லாத செந்நெறி ஒழுகிச் சீரும் சிறப்பும் பேரும் புகழும் நிறைந்து விளங்குவோமாக.

([illegible]–8–60ல் ஆசிரியர் சென்னை வானொலியில் பேசியது.)

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் என்பதை நிபுணர்களைக் கொண்டு ஆராய்வது பயனுள்ளதாக இருக்கும். இதற்கு வழி செய்து விட்டால் சாதாரண பணிகளை நாடுவோர் அதிகச் சிரமமின்றித் தேறுவதற்கு வழிவகை காண்பது சுலபமாயிருக்கும். மாணவர்கள் படிப்பில் சேதாரம் வெகுவாகக் குறைந்து விடும்.

—"தினமணி"
19—5—63

கல்வியின் தரம் உயர

கல்வியின் தரத்தை உயர்த்துவது அவசரமான பிரச்னையாகி விட்டது என்று 53வது சென்னை ராஜ்யக் கல்வி மாநாட்டுக்குத் தலைமை வகித்த ஸ்ரீ ராஜா அய்யர் எம். எல். சி., வற்புறுத்தினார். ஹைஸ்கூல்களை விஸ்தரித்துக்கொண்டே போவதை இப்போதைக்கு நிறுத்திக் கொண்டு, எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் கல்வியின் தரத்தை உயர்த்துவதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கூறினார். கல்வியில் ஆர்வம் வளர்ந்து வந்த சூழ்நிலையில், எல்லாப் பெரிய கிராமங்களிலும் ஹைஸ்கூல்களை அண்மையில் நிறுவினார்கள். இவை பெரும்பாலும் போதிய முன்னேற்பாடுகளின்றித் தோற்றுவிக்கப்பட்டவை. இட வசதி, ஆசிரியத் தகுதி, விஞ்ஞான பாடங்களை நல்லபடி போதிப்பதற்கான சோதனைக் கூடங்கள் முதலியவை போதுமானபடி இவற்றில் இல்லை. இதே மாதிரி பள்ளிக்கூடங்களை விஸ்தரித்துக் கொண்டே போவதைவிட, ஏற்கெனவே நடந்து வருபவை திறம்பட இயங்கச் செய்வதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருப்பதாகவே தோன்றுகிறது இதை எப்படி நடத்தி வைப்பது என்பதுதான் பிரச்னை.

கட்டிட வசதிகளைப் பெருக்குவது அவ்வளவு சுலபமல்ல. சோதனைக்கூட வசதிகளை விஸ்தரிப்பதில் நடைமுறைச் சிரமங்கள் இருக்கின்றன. இருந்தாலும் இவற்றைச் செய்துதான் ஆக வேண்டும். மேல் வகுப்புகளில் போதிப்பதற்கு அனுபவமும் முழுத் தகுதியும் உள்ள ஆசிரியர்கள் போதிய எண்ணிக்கையில் கிடைக்கக் கூடியபடி, பட்டதாரிகளுக்குப் பயிற்சி தரும் காலேஜுகளை அதிகப்படுத்த வேண்டும். ஏற்கெனவே இருந்து வருபவைகளில் இரண்டு ஷிப்டு ஏற்படுத்தலாம். தற்காலிக ஏற்பாடாக சாதாரண காலேஜுகளில் எல்லாம் போதனா முறைப் பயிற்சியை அளிப்பதற்கு வழி செய்வது பயனுள்ளதாக இருக்குமென்று கருதுகிறோம். இதில் கல்வி அமைச்சர் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கிறோம். உபாத்தியாயர்கள் ஓய்வு பெறும் வயதை 58 ஆக உயர்த்தியிருப்பது நல்ல முடிவு. ஆனால் கோவை மகாநாடு கோரியுள்ளபடி இதை 60 ஆக உயர்த்துவது அவசியமென்றே தோன்றுகிறது. தேக திடமிருப்பவர்களை, பழைய விதிகளின்படியே, 62 வயது வரை பயன் படுத்திக் கொள்வதற்கு வசதி இருக்க வேண்டும். இடைக்கால ஏற்பாடாக அச்சலுகையை அளித்து அமலாக்கினால், அடுத்து வரும் சில ஆண்டுகளில் தேவையை மதிப்பிட்டு, அதற்கு ஏற்பப் பட்

டதாரிகளுக்குப் போதிய எண்ணிக்கையில் பயிற்சி தருவதற்கு அவகாசம் கிடைக்கும்.

கீழ் வகுப்புகளில் போதனை இப்பொழுது அவ்வளவு திருப்திகரமாக இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. எஸ். எஸ். எல் சி. பரீட்சைகளில் நன்றாகத் தேறுகிறவர்களுக்கே உபாத்திமைக்கான அடிப்படைத் தகுதி இருப்பதாக எல்லோர் விஷயத்திலும் கருத முடியாது. இச்சூழ்நிலையில், அதற்குக் குறைந்தபடிப்புள்ளவர்களை இனிப் புதிதாக ஆசிரியப் பயிற்சிக்கு அனுமதிக்கவே கூடாது. ஆசிரியத் தொழில் பிற வகைப்பணிகளைப் போன்றது அல்ல. எதிர்காலச் சமுதாயத்தை, ஆயிரங்காலத்துப் பயிரை, நல்ல முறையில் வளர்க்கும் தலையாய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு எனவே இதை நாடுவோர் முதன்மையான தகுதி உள்ளவர்களாக இருக்கச் செய்வது இன்றியமையாத தேவை இனி ஹையர் எலிமெண்டரி போதனா முறைப் பயிற்சி எதற்காக நீடிக்க வேண்டும் என்ற கேள்வி நியாயமானது. எட்டாவது படித்தவர் உபாத்தியாயராகும் நிலைமை இனி நீடிக்க வேண்டிய அவசியமில்லை. எஸ் எஸ். எல். சி. யில் வருஷா வருஷம் அரை லக்ஷம் பேருக்கு மேல் தேறுகிறார்கள். அவர்களில் தகுதியுள்ள பலர் ஆசிரியத் தொழிலுக்கு வருவதற்குக் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில் எல்லா ஹையர் எலிமெண்டரி ஆசிரியர்களும் வேனிற்கால விடுமுறையில் பயிற்சி பெற்று, செகண்டரி பயிற்சிப் பரீட்சைகள் எழுதி, தமது தகுதிகளை உயர்த்திக் கொள்வதற்குப் பரவலாக உதவி யளித்து, எல்லா ஏற்பாடுகளையும் செய்து தருவது பயனுள்ளதாக இருக்கும்.

கல்வியின் தரத்தை உயர்த்துவதுடன் நெருங்கிய சம்பந்தமுள்ள மற்றொரு அம்சம், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே இருந்து வரவேண்டிய நெருங்கிய தொடர்பு. வகுப்புகள் பெரிதாக இருந்தாலும், உபாத்தியாயர்களுக்குப் போதிய ஓய்வு இல்லாமல் இருந்தாலும், இந்த உறவு முறை கெட்டு விடுகிறது. தனித்தனியாக ஒவ்வொரு மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் கவனம் செலுத்திக் குறைகளை நிறைசெய்ய முற்பட வேண்டுமாயின், உபாத்தியாயருக்கு நிறைய அவகாசமும் வசதியும் தரவேண்டும். பெற்றோர்களுடன் கூட உபாத்தியாயர்கள் நீடித்த தொடர்பு கொள்ள முடிந்தால் நல்லதுதான். ஆனால் எல்லாப் பெற்றோர்களுமே தமது குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் போதிய அக்கறை காட்டக் கூடியவர்களாக இருக்கவில்லை. படித்தவர்களுக்கும் சரி, படிக்காதவர்களுக்கும் சரி, அன்றாட காலட்சேபமே பெரியபாடாக இருந்து வருகிறது. இங்

நிலையில் உபாத்தியாயர் தரக்கூடிய யோசனைகளைக் கவனித்துக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு பெற்றோரில் மிகச் சிலருக்கே இருக்கிறது. அந்த வாய்ப்பு இருந்து வருவது அவசியம். ஆனால் பொதுவாகக் கஷ்டம் நிறைந்த சூழ்நிலை இருந்து வருவதன் காரணமாக, குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கும் உபாத்தியாயர்களுக்குமுள்ள பொறுப்பு இரட்டிப்பாகிறது. இது சரிவர நிறைவேற்றப்பட வேண்டுமாயின், உபாத்தியாயர்களுக்குப் போதிய அவகாசம் தேவை.

பள்ளிக்கூடங்கள் நடக்கும் காலம் 240 நாட்களாக உயர வேண்டும் என்று மத்தியக் கல்வி ஆலோசனைக் கவுன்சில் அபிப்பிராயப்படுகிறது. ஏற்கெனவே சென்னை ராஜ்ய ஸ்கூல்களில் 200 நாள் வேலை நடக்கிறது. இதை 220 நாளாக ராஜ்ய சர்க்காரே உயர்த்தியிருக்கிறார்கள். இதற்குமேல் கூடுதலாக்கினால் போதனையின் தரம் பாதிக்கப்படும். மாணவர்களுக்கு இடும் எழுத்து வேலைகளையெல்லாம் சரி பார்ப்பதற்கு உபாத்தியாயர்களுக்குப் போதிய அவகாசம் இருந்தாக வேண்டும். இதைக் கருத்திற் கொண்டு அவர்களுடைய வேலைக் கிரமத்தை ஒழுங்கு செய்வது மிக மிக அவசியம். தவிர, இப்பொழுது கீழ் வகுப்புகளில் அநாவசியமான பல விஷயங்கள் போதிக்கப் பெறுவதால், முக்கியமான பாடங்களில் போதிய கவனம் இல்லாது போகிறது. அவற்றைக் குறைத்துவிடலாம். தவிர, தேசத்தின் வழி வழியான பண்பாடும் நல்லறமும் மாணவர்களின் மனதில் தெளிவாகப் பதியக்கூடியபடி சில வகைப் பாடங்களையும் கதைகளையும் சேர்க்க வேண்டிய அவசியமிருக்கிறது. ஆசிரியத் தொழிலில் நீண்டகால அனுபவம் உள்ளவர்களைக் கலந்து கொண்டு இதற்கான திட்டமொன்றை உருவாக்கலாம். கட்டுப்பாடும், ஒழுங்கும், நல்ல பழக்க வழக்கங்களும், செய்நேர்த்தியும் இள வயதில் படிய வேண்டியவை. இதைக் கருத்திற் கொண்டு போதனா முறையையும் பாடத் திட்டங்களையும் திருத்தியமைக்க முற்படுவது விரும்பத் தக்கது.

கல்வியின் தரம் உயர்வதற்கு மற்றொரு வழியும் உண்டு. உயர் தரப் படிப்பை நாடுவோர் அடி வகுப்பிலிருந்தே மற்றவர்களை விட அதிகமாகக் கஷ்டப்பட்டு உழைத்து அதிகமான தகுதி பெறச் செய்யலாம். அதற்கேற்றபடி இங்கிலாந்தில் 'கிராமர் ஸ்கூல்கள்' இருப்பது போல தனிப் பள்ளிக்கூடங்கள் இருக்கலாம்; அல்லது பொறுக்கியெடுத்த பள்ளிக்கூடங்களில் ஒவ்வொரு வகுப்பிலும் ஒன்றிரண்டு பிரிவுகளை இவர்களுக்காக ஒதுக்கிவைக்கலாம். இதை எந்தக் கட்டத்தில், எவ்வாறு செய்ய

(25-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை :

மகிழம்பூ

— தாமரைக்கண்ணன் —

அன்று விடுமுறை நாள்.

ஏதோ விழாவென்று சொல்லி அலுவலகத்திற்கு ஊழியர்கள் அனைவரையும் அழைத்திருந்தார்கள்.

வாழ்க்கை வண்டியை இழுத்துச்செல்ல முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கும் நமக்கு விழாவாவது—மண்ணாங்கட்டியாவது! நின்றுவிடுவதாக இருந்தேன். எங்கேயோ சென்று நான் கணு கடன் வாங்கிவந்த கோமதி, "இங்கிருந்து இரண்டணுதானே பஸ்ஸுக்கு'பஸ்ஸிலேயே போய் வந்து விடுங்கள்; வீட்டில் நாம் எப்படியிருந்தாலும். ஆபீஸில் நான்கு பேருக்கு மத்தியில் கௌரவமாக நடந்து கொள்ள வேண்டும்" என்று அனுப்பி வைத்தாள்.

தினமும் காலையும் மாலையும் நடந்து கால்கள் தேய்ந்து விட்டன. பிறகு, கருங்குழியில் இருக்கும் வீட்டிலிருந்து மதுராந்தகத்தில் இருக்கும் ஆபீஸ் வரை இரண்டு வேளையும் நடக்க வேண்டும் என்றால்— இரண்டரை மைல் தூரமாயிற்றே!

அலுவலகத்தில் விழா பதினொரு மணிக்கு முடிந்தது. காலையிலே சாப்பிடாமல் வந்தது—விழா முடிந்து கொடுத்த வெற்றிலைப் பாக்கு வேறே வெறும் வயிற்றில் சென்று பசியைக் கிளறியது. பஸ் நிலையமாவது சற்றுத் தள்ளியிருக்கக் கூடாதா? அதுவும் ராயர் ஓட்டலுக்கு அருகே யிருந்து காற்றில் மிதந்து வரும் சிற்றுண்டிகளின் மணத்தால் மனிதனை வாட்டி எடுக்க வேண்டுமா?

இரண்டு பக்கமும் இருந்த ஓட்டல்கள் கண்ணில் பட்டு விடக் கூடாதே என்று பார்வையைத் தரையில் செலுத்திக் கொண்டே சென்று பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன்.

பஸ் புறப்பட ஐந்து நிமிடங்கள் இருந்தன. ஒரு பெண்... பதினைந்து வயதிருக்கும். கையில் ஒரு நோட்டுப் புத்தகத்துடன் பஸ்ஸில் ஏறினாள். பிரயாணிகள் ஒவ்வொருவரிடமும் சென்று கைநீட்டி நின்றாள். ஒரு காசு... இரண்டு காசு என்று புதுக்காசுகள் அவளுடைய கைகளில் வந்து விழுந்தன.

எவ்வளவு மோசமான உலகம்... இந்த உலகில் எத்தனை விதவிதமான வாழ்க்கைகள்! கள்ளம் கபடம் அற்ற புஞ்சிட்டைப் போலப் பறந்து திரிந்து எதிர்

கால மண வாழ்க்கையைப் பற்றிய இன்பக்கனவுகளைக் கண்டு மகிழ்ச்சியுடன் நாட்களைக் கழிக்க வேண்டிய அந்தப் பெண் பிச்சை எடுக்கிருள். இந்தப் பருவ வயதில் அவளுக்கு வயிற்றுக் கவலை...வாழ்க்கைக் கவலை! என்றைக்குத்தான் இந்த உயர்வு தாழ்வு மனித சமுதாயத்தை விட்டு நீங்குமோ?

"சார்...!"

எனக்கு எதிரில் அமர்ந்திருந்த ஒரு சில்க் ஜிப்பாக்காரரிடம் அந்தப் பெண் கை நீட்டினுள்.

"சேச்சே! பஸ்ஸில் ஏறிஞல் போதும். உங்க தொல்லையே பெரிசாப்போச்சு..போ..போ.." என்று எரிந்து விழுந்தார் அவர்; அவரை அலட்சியமாகப் பார்த்து விட்டு அவள் அடுத்தவரிடம் நகர்ந்தாள்.

எவ்வளவு நாகரிகமான மனிதராகத் தெரிகிருர் அவர். ஒரு காசு பிச்சை போடவும் மனம் இல்லாத இவரும் ஒரு மனிதப் பிறவியா?

"சார்...!"

கையை நீட்டிய வண்ணம் அந்தப் பெண் என் எதிரில் வந்து

வாடிஞலும் மகிழ மலர்
மணம் குறைவதில்லை.
நல்ல குடும்பத்தின்
குணமும்
வறுமையால் மறைவதில்லை.

நின்ருள். அவள் தோற்றத்தை ஊடுருவின என் கண்கள்.

நீலப் பாவாடை...சந்தன நிற 'ஏர்கண்டிஷன்' ஜாக்கெட்... மெல்லிய சிவப்பு நிற நைலான் தாவணி...காதுகளில் இரண்டு ஸ்டார்...தலையில் 'ரிங்' போட்டு வலை வைத்துக் கட்டியிருந்தாள். 'ரிங்'கைச்சுற்றி மல்லிகைப் பூ..!

பிச்சை யெடுத்தாலும் எவ்வளவு சுத்தமாகவும் நன்ருகவும் தன்னையும் தன் துணிமணிகளையும் அவள் வைத்துக் கொண்டிருக்கிருள்?

உருண்டையான முகத்தில் மகிழ்ச்சியின் மலர்ச்சி... இந்த வயதில் நாம் பிச்சை யெடுக்கிருேமே என்ற கவலை சிறிதும் இல்லாத மகிழ்ச்சி...வெள்ளைப் பற்கள் இலேசாக வெளியில் தெரியும்படி முல்லைச் சிரிப்பு...! இளகாத மனமும் இளகிவிடும்படி இதயத்தை நெகிழ வைக்கும் சிரிப்பு...இப்படிப் பலர் முன்னிலையில் பலரிடம் கைநீட்டிக் காசு வாங்கி வயிறு வளர்க்க வேண்டியிருக்கிறதே என்ற நாணமும் லஜ்ஜையும் கலவாத சிரிப்பு...!

"சார்...! ரொம்ப நேரமா நிக்கிறேன், சார்...!"

அவள் தருமம் கேட்பது போல் கேட்கவில்லை. ஏதோ அண்ணன் தம்பி, மாமன் மைத்துனனுடன் கொடுத்து வைத்திருப்பதைக் கேட்பதுபோல் அல்லவா சகஜமாக...சாதாரணமாக

ஏன், சற்று உரிமையோடுகூடக் கேட்கிறாள்!

"சார்...பசிக்குது, சார்!"

பாவம்! அந்தப் பெண்ணைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் என்னுள் துடித்தது.

"உன் பேர், என்னம்மா?"

"காஞ்சனா...!"

"உங்க ஊர் எது...?"

அவள் அதற்குப் பதில் சொல்லவில்லை.

"சார்...ரொம்பப் பசிக்குது சார்!"

"உனக்கு அப்பா அம்மா இல்லையா?"

அதற்கும் சரியான பதில் இல்லை.

"சார்! பசி, வயிற்றைக் கிள்ளுது சார்!"

"சின்ன வயசா இருக்கே. இதற்குள் இம்மாதிரி ஏம்மா ஆயிட்டே...?" கனிவோடுதான் கேட்டேன்.

அவள் தான் வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தின் முதல் பக்கத்தைப் பிரித்து என்னிடம் நீட்டினாள். நான் படித்துப் பார்த்தேன்.

'கடவுள் துணை. இதனால் சகலமான கனதனவான்களுக்கும் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்...நான் சேலத்தைச் சேர்ந்தவன். நெசவுத் தொழிலாளி. பெரிய குடும்பஸ்தன். இந்த ஊருக்கு—மதுராந்தகத்திற்கு வந்து ஒரு வாரம் ஆகின்றது. நெசவுத் தொழில் நசித்துப் போய்விடவே பிழைப்புக்காக இந்த ஊருக்கு வந்தோம், குடும்பமாக! ஒரு நாள் கூலிக்குத் தேங்காய் பறிக்கத் தென்னை மரத்தின்மீது ஏறியபோது தவறிக் கீழே விழுந்து விட்டதால் இரண்டு கால்களும் முறிந்து விட்டன. ஆஸ்பத்திரிக்குச் செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடக்கிறேன். ஏழு குழந்தைகளுடன் நானும் என் மனைவியும் இராப்பட்டினி—பகல் பட்டினி கிடக்கிறோம். இந்த நோட்டுப் புத்தகம் கொண்டுவரும் என் மகள் பெயர் காஞ்சனா. விதிவசத்தால் எங்கள் குடும்பம் நடுத் தெருவில் நிற்கிறது. இதைப் பார்க்கும் தருமவான்கள் தங்களால் இயன்ற பொருள் உதவி செய்து இந்த ஏழையைக் காப்பாற்ற வேணுமாய் மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
இராமலிங்கம்
நெசவுத் தொழிலாளி, சேலம்'

விளக்கத்தைப் படிக்கப் படிக்க என நெஞ்சம் குமுறியது. நாம்தான் ஆறு குழந்தைகளை வைத்துக்கொண்டு ஒரு குமாஸ்தாவின் சம்பளம் போதா

மல் ஆலாய்ப் பறக்கிறோம் என்றால், நம்மைவிட மோசமான நிலையில் எத்தனை குடும்பங்கள் தத்தளிக்கின்றன.

“சார்...சார்! பஸ் புறப்படப் போவுது, சார்!”

காஞ்சனா பரபரத்தாள். அவளுடைய வயதில் எனக்கு ஒரு பெண் இருக்கிறாள். கருங்குழி உயர்நிலைப் பள்ளியில் பத்தாவது படிக்கிறாள். ஒட்டுப்போட்ட பாவடையையும் கிழிந்துபோன தாவணியையும் திருப்பித் தைத்துக் கட்டிக்கொண்டு பள்ளிக்குச் சென்றாள். அவளே எதிரில் வந்து நின்று, ‘ஐயா! நாங்கள் ஏழை ஐயா. பசி உயிர்போகிறது. காலணா இருந்தால் கொடுங்கள் ஐயா’ என்று கெஞ்சிப் பிச்சை எடுப்பதைப்போல ஒரு மாயத் தோற்றம் தோன்றியது. என் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிந்தார்கள். ‘சட்’டென்று பத்துப் புதுகாசை யெடுத்து காஞ்சனாவின் கையில் திணித்தேன்.

டிரைவர், ‘பாம்..பாம்’ என்று ஹாரனை அழுத்தி அடித்து விட்டு வண்டியை எடுத்தார்.

அவள், என் கையிலிருந்த நோட்டுப் புத்தகத்தைப் பிடுங்கிக்கொண்டு மகிழ்ச்சி நிரம்பிய- ஆனால் நன்றி கலவாத ஒரு சாதாரண முல்லைச் சிரிப்பை அனுவசியமாக என்மீது வீசி விட்டுத் தன் கையிலிருந்த சில்லறைக் காசுகளை எண்ணிக்கொண்டே பஸ்ஸை விட்டுக் கீழே குதித்தாள்.

பஸ் புறப்பட்டது. என் சிந்தனை அந்தப் பெண்ணையும், வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் அவளுடைய குடும்பத்தையும், இந்தச் சமுதாயத்தின் விசித்திரமான வாழ்க்கை அமைப்புக்களையும் பற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

“சார், டிக்கட்...!”

கண்டக்டரைப் பார்த்ததும் சட்டைப் பையில் கையை விட்டேன். எத்தனை தடவை துழாவிப் பார்த்தாலும் மூன்றே காசுகள்தாம் வந்தன. பிறகுதான் புரிந்தது. பஸ்ஸுக்காக வைத்திருந்த காசை எடுத்து அந்தப் பெண்ணுக்குத் தானம் செய்து விட்டிருக்கிறேன்.

“என்ன சார்! சில்லறை இருக்கிறதா, இல்லையா? இல்லேன்னா இறங்கிடுங்க...ஹோல்டான்!”

பஸ் நின்றது. நான் இறங்கினேன். என் எதிரிலிருந்த அந்த சில்க் ஜிப்பாக்காரர் என் பரிதாப நிலையைக் கண்டு நமட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

பஸ் மீண்டும் புறப்பட்டுச் சென்றதும், தார் ரோட்டில் கருங்குழியை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

மண்டை பிளக்கும் வெயில்; காலைக் கீழே வைக்க முடியாத

அளவுக்குச் சாலையின் கொதிப்பு; அதுவரை தற்காலிகமாகத் தணிந்திருந்த பசி விஸ்வரூபம் எடுத்தது; குடலைப் புரட்டி எடுக்கும் அகோரப் பசி...இத்தனையையும் தாங்க முடியாமல் தாங்கிக்கொண்டு, 'ஒரு பெண்ணின் பசியைப்போக்க நம்மால் முடிந்த அளவுக்கு உதவி செய்தோம்' என்ற ஆத்ம திருப்தியுடன் வீடு நோக்கி நடந்தேன்!

2

தினந்தோறும் வீட்டில் நடக்கும் நாடகம் உச்ச கட்டத்தில் இருந்தது.

பத்தாவது வகுப்பில் படிக்கும் பெரிய பெண் மாலதி, மனைவியிடம் "நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகமாட்டேன்" என்று அபாயச் சங்கு ஊதிக்கொண்டிருந்தாள்.

"நாற்பது ஸ்டூடன்ஸ் மத்தியில் நான் எவ்வளவு அவமானப் படுவது? தமிழ் நோட்ஸ் இல்லை. இங்கிலீஷ் புத்தகம் இல்லை... டிராயிங் நோட்புக், கலர் பாக்ஸ் எதுவுமில்லை. சுற்றுப் பயணம் போக வேண்டும் என்றால் பணம் இல்லை. வகுப்பில் அத்தனை மாணவர்கள் எதிரில் நான்தான் தனிமரம் மாதிரி எடுத்ததற்கெல்லாம் 'இல்லை இல்லை' என்று எழுந்து எழுந்து நிற்கிறேன். அம்மா! முடிவாச் சொல்றேன். ஸ்கூலுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுத்தால்தான் நான் இனி மேல் படிக்கப் போவேன். இல்லைன்னு, படிப்புக்கு ஒரு முழுக்குப் போட்டுடறேன். அப்பாக்கிட்டே சொல்லிடுங்க...!"

"சபாஷ், அக்கா! அதுதான் சரி! அம்மா! எங்களுக்கு ஒவ்வொரு தடவையும் கிளாசிலே எவ்வளவு 'ஷேம்' தெரியுமா? என்னையும் அக்கா லிஸ்டிலே சேர்த்திடுங்க! நாங்கள் என்ன அம்மா, பள்ளிக்கூடம் போவதற்கு சைக்கிள் வேண்டும்...கார் வேண்டும் என்றா சொல்கிறோம்? மூன்று வேளைக்கும் வடை பாயாசத்தோடு சோறு வேண்டும் என்றா கேட்கிறோம்? படிப்பதற்குப் புத்தகங்களையாவது ஒழுங்காக வாங்கிக் கொடுங்கள் என்றுதானே கேட்கிறோம்? அது தவறா? கேட்கக்கூடாதா நாங்கள்? கேட்பதற்கு நியாயம் இல்லையா எங்கள் பக்கம்?"

மகன் சினிமா வசனத்தை உணர்ச்சி ததும்ப ஒப்புவித்தான். அதில்தான் எத்தனை எத்தனைப் பொருள்கள் அடங்கிக் கிடக்கின்றன.

"ஒலக்கை...ஒலக்கை! சினிமா வசனமாடா பேசறே...? இருக்கிறதோ... இல்லையோ, அடக்க ஒடுக்கமாப் படிச்சு முன்னேறினா உங்களுக்குத்தானேடா நல்லது? இல்லேன்னா எங்கேயாவது கெட்டுக் குட்டிச்சுவராப் போகப் போறீங்க — நாங்களும் தான் எவ்வளவோ கஷ்டப்பட்டு உங்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறோம்."

பிள்ளைகளுடைய கேள்விகளுக்கு நியாயமான முறையில் பதில் சொல்ல முடியாத நிலையில் என் மனைவி கோமதி திணறினாள்.

நான் கனைத்துக்கொண்டே வீட்டின் உள்ளே நுழைந்தேன்.

என்னைக் கண்டதும் மாலதியும் பையனும் புத்தகங்களை எடுத்துக் கொண்டு படிக்கப் போய் விட்டனர். கோமதியும் அடுக்களைக்குச் சென்று விட்டாள். பைத்தியக்காரி...இதைப் போன்ற ரகளைகளை யெல்லாம் என்னிடம் சொல்லி மேலும் என மனப்பாரங்களை அதிகமாக்கக்கூடாது என்பது அவள் நினைப்பு! ஆனால் எல்லாவற்றையும் தெரிந்து வைத்துக்கொண்டு 'பிள்ளைகளையும், மனைவியையும் துன்பத்தின் நிழல் தொடரா வண்ணம் பார்த்துக் கொள்ள முடியவில்லையே' என்று மனசுக்குள்ளேயே மக்கி மக்கி மருகிக் கொண்டிருக்கிறேன் நான் என்பது அவளுக்கு எங்கே தெரியப் போகிறது?

அரை வயிறு ரசமும் சோறும் சாப்பிட்ட பிறகு...மனச்சோர்வுடன் கட்டிலில் அமர்ந்திருந்திருந்தேன்.

"மண்டை பிளக்கிற வெய்யிலில் ஏன் நடந்து வந்தீங்க... நான்தான் பஸ்ஸுக்குக் காசு கொடுத்து அனுப்பினேனே" என்று அன்புடன் கேட்டுக் கொண்டே கோமதி வந்தாள்.

காலையில் சென்றபோது பஸ்ஸுக்கு இரண்டணா போனதையும், திரும்பியபோது பத்துக் காசைப்பஸ்ஸில்பார்த்த பிச்சைக் காரப் பெண்ணுக்குக் கொடுத்து விட்டு நடந்து வந்ததையும் சொன்னேன்.

"என்னவோ'ங்க! நமக்கு இந்த இரக்க குணம் இருக்கிறவரைக்கும் கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்" என்றாள்.

"அது போகட்டும்! மீனா... சோமு...உமா...மணி எல்லாம் எங்கே?"

"அவர்கள் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளுடன் விளையாடப்போயிருக்கிறார்கள்" என்றாள்.

நான் பொன்னேரியிலிருந்து மதுராந்தகத்திற்குச் சமீபத்தில் தான் மாறுதல் ஆகி வந்திருந்தேன். மதுராந்தகத்தில் வசதியாகவும் வாடகை குறைவாகவும் வீடு கிடைக்காததால் குடும்பத்தைக் கருங்குழியில் வைத்துக் கொண்டேன்-தினமும் இரண்டு மைலுக்குமேல் நடந்தாலும் பாதகமில்லை என்ற எண்ணத்துடன்!

கருங்குழிக்குக் குடிவந்து ஒரு மாதம்கூடச் சரியாக ஆகாததால் அக்கம் பக்கத்திலும் யாருடைய பழக்கமும் இன்னும் ஏற்படவில்லை. வீட்டிலிருந்த நகைகள் தீர்ந்து விட்டன. பித்தளைச் சாமான்களை அடகு வைக்க வேண்டிய நிர்ப்பந்தம்...வெளியில் சொன்னால் வெட்கக்கேடு!

என்ன வாழ்க்கையோ... மண்ணாங்கட்டி வாழ்க்கை...!

கோமதி—எனக்கு எந்தத் தொல்லையும் கொடுக்காமல் குடும்பம் நடத்துவதில் கெட்டிக்காரி! பக்கத்து வீட்டில் வேலைசெய்யும் யாரோ ஒரு வேலைக்காரி மூலம் தெரிந்து கொண்டு, சில்லறை நகைகளை எங்கேயோ ஒரு வீட்டில் அடகுவைத்துப் பணம் வாங்கி வந்ததால் பத்து நாட்கள் நிம்மதியாகப்போயின. அங்கே.. ஒரு ரூபாய்க்கு வாரத்திற்கு ஓர் அணா வட்டியாம்!

"நாளைக்கு அரிசி இருக்கிறதா, கோமதி!"

"எல்லாம் இருக்கிறது; நான் எப்படியாவது சமாளித்துக் கொள்கிறேன் நீங்கள் அமைதியாக இருங்கள்" என்றாள்.

'எல்லாம்' என்ற அந்தச் சொல்லில் எவ்வளவு பொருள்கள் அடங்கியுள்ளன என்பது என் ஒருவனுக்குத்தான் தெரியும்!

3

மறுநாள் காலை! கோமதி கட்டிக்கொடுத்த சோற்றுப் பொட்டலத்தைப் பையில் போட்டுக் கொண்டு அலுவலகத்திற்குப் புறப்பட்டேன்...நடந்துதான்!

மதியம் உணவு வேளை வந்தது. நான் ஓர் ஓட்டலில் அனுமதி கேட்டுக் கொண்டு ஒரு மூலையில் சென்று அமர்ந்து வீட்டிலிருந்து எடுத்துச் செல்லும் உணவை உண்பது வழக்கம். எனவே; ஓட்டலை நோக்கி நடந்தேன், உணவுப் பொட்டலத்துடன்! கடைவீதியிலுள்ள காந்தியண்ணல் சிலைக்கு அருகில் நான் வந்து கொண்டிருந்தபோது, எனக்கு முன்னால் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்ற எழுபது வயதுக் கிழவர் ஒருவர் 'திடுமென' மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விட்டார். உடனே, அவருடைய கால்களும் கைகளும் காக்கை வலி வந்ததைப்போல இழுத்தன. பற்கள் கிட்டிக் கொண்டன. சாலையில் நடந்து சென்றவர்கள் சிறு கும்பலாகக்கூடி அதை வேடிக்கை பார்த்தனர். சிலர், 'பாவம்...ச்சூ...ச்சூ' என்று சூள் கொட்டிக் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். ஆனால் ஒருவர்கூட முன் வந்து அந்தக் கிழவரைத் தொட்டுத் தூக்கவில்லை.

'இவர்களெல்லாம் மனிதர்களா? கொஞ்சமும் ஈவு இரக்கம் இல்லாதவர்கள்...!'

என் மனம் பதறியது. ஓடிச் சென்று அருகிலிருந்த டீக்கடையில் ஒரு செம்பில தண்ணீர் வாங்கி வந்து அந்தக் கிழவர் முகத்தில் தெளித்து, எனனுடைய மேல் துண்டால் அவருடைய முகத்தைத் துடைத்தேன். அவருடைய கிட்டிப் போயிருந்த பற்களைச் சிரமப்பட்டு விரலால் விலக்கிக் கொஞ்சம் தண்ணீர் உள்ளே செலுத்தினேன்.

இரண்டொரு நிமிடங்களில் கிழவர் கண் திறந்து பார்த்தார். கூட்டத்தில் இருந்த ஒருவர், "சார்...ரொம்பவும் நல்லவர். தன்னுயிர்போல் மன்னுயிரைப் பார்ப்பவர் தானுங்க உலகில் உத்தமர்.." என்று எனக்குப் பாராட்டுரை வழங்கினார். இன்னொருவர் அந்தக் கிழவர் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு, "அடடா... இந்தக் கிழவரா? இவருக்கு அடிக்கடி இந்த மாதிரி மயக்கம் வருமே" என்று சிரித்துக்கொண்டே சென்றார். உலகம் பலவிதம்!

நான் கிழவரைக் கைத் தாங்கலாகத் தூக்கி நிறுத்தினேன்; கூட்டம் கலைந்து விட்டது. கடைக்குச் சென்று செப்பைக் கொடுத்துவிட்டு வந்தேன். எனக்கு அந்தப் பெரியவரைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆவல். அவரை ஏரிக்கரைப் பக்கம் அழைத்துச் சென்று அவருடைய வாழ்க்கையைக் கேட்டேன்.

அவரும் சொன்னார்:

"அந்த வெட்கக்கேட்டை ஏன் தம்பி கேக்கறீங்க. எனக்கு வந்தவாசி சொந்த ஊரு. வீரனும் சூரனுமா நாலு பிள்ளைகள் இருக்கானுங்க. ஒவ்வொருத்தனும் நல்லாச் சம்பாதிக்கிறான். வயசாகிப் போய்விடவே என்னால் உழைக்க முடியல்லே. எனக்குச் சோறு போடுவதற்குப் போட்டி போடறானுங்க. நீ சம்பாதிச்சு எங்களுக்கு வச்ச சொத்து முழுகிப் போவுதான்னு குத்திக் காட்டறானுங்க...எம் மனம் தாங்கலே..வீட்டைவிட்டு கிளம்பி வந்துட்டேன்..."

"உங்களுக்குச் சாப்பாடு...?"

"சாப்பாடா? சாப்பாடு ஏது தம்பி? சாப்பிட்டு ரெண்டு நாள் ஆச்சு. கல்லைப்போல நாலு பிள்ளைகளைப் பெற்றுவிட்டு அந்தியக் காலத்திலே நான் அனாதையா ஆயிட்டேன், தம்பி!"

கிழவர் கண்கள் கலங்கின; விம்மினார்.

அவர் நிலை பரிதாபமாக இருந்தது. என்னிடம் இருந்த உணவுப் பொட்டலத்தை எடுத்து அவரிடம் கொடுத்து, "சாப்பிடுங்கள்" என்றேன்.

அவர் நன்றி உணர்வோடு அதை வாங்கிக் கொண்டு என்னைக் கையெடுத்துக் கும்பிட்டார்.

மறுமலர்ச்சி யடைந்துவரும் நம் நாட்டில் இப்படிக்கூட ஒரு மனிதன் வாழ்கிறானா? நம் வாழ்க்கை இதைவிட நூறுபங்கு மேல் போல் இருக்கிறதே!

அவருடைய வாழ்க்கை நிலையை நினைக்க நினைக்க என் நெஞ்சு வெடித்து விடும்போல் இருந்தது. கிழவர் அழைத்தார்!

"தம்பி...!"

"என்னங்க..."

"தப்பா நினைச்சுக்காதீங்க, தம்பி! நான் சாப்பாடு இல்லாம

கூட இன்னும் ஒரு நாள் இருப்பேன்; வெற்றிலைப் பாக்கு இல்லாம இருக்கிறதுன்னு ரொம்பச் சிரமமாயிருக்கு.... ஒரு அரையணா இருந்தாக் கொடுக்கிறீங்களா...வாய் என்னவோ போல இருக்கிறது...'' கைகளைக் கூப்பி உடல் குறுகி நின்றார். பஞ்சடைந்த அவர் கண்கள் கலங்கிக் கெஞ்சின.

முதல் நாள் சம்பவத்திற்குப் பிறகு என் சட்டைப் பையில் மிச்சமாகக் கிடந்த மூன்று காசுகளை அந்தக் கிழவரிடம் போட்டு விட்டு அலுவலகத்திற்குத் திரும்பினேன், அவரிடம் விடை பெற்றுக்கொண்டு!

உடன் பணிபுரியும் 'சமத்' என்னும் தோழர் மிகவும் நல்லவர் பசியால் துடிக்கும் என் நிலையை உணர்ந்து எட்டணா கடனாகக் கொடுத்து என் களைப்பைப் போக்கினார்!

4

அலுவலகத்தில் வேலை அதிகம். வீட்டிற்கு வந்து சேர்ந்த போது மாலை ஆறரை மணியாகி விட்டது.

அதுவரை வீட்டைப் போர்க்களமாக்கிக் கொண்டிருந்த பிள்ளைகள் விளக்கின் எதிரில் அமர்ந்து அமைதியாகப் படிப்பதைப் போலப் பாவனை செய்து கொண்டிருந்தார்கள்.

தோட்டத்திற்குச் சென்று முகம் கைகால் கழுவிக்கொண்டு உள்ளே வந்தேன்; கோமதியைப் பார்த்தேன். காணவில்லை, சமையலறைக்குச்சென்று பார்த்தேன். அங்கும் இல்லை! அரிசி ஆய்விட்டது என்று கோமதி கூறியது அப்போதுதான் நினைவுக்கு வந்தது. குழந்தைகள் ஒவ்வொருவருடைய முகமும் பசியால் வாடி வதங்கியிருந்தன.

மீனு ஐந்தாவது படிப்பவள். அவளைத் தனியாக அழைத்து ''அம்மா, எங்கேம்மா...!'' என்றேன்.

''செப்புக்குடத்தை எடுத்துச் சென்றார்கள் அப்பா, அடகு வைத்துப் பணம் வாங்கி வர...!'' என்றாள்.

என் இதயத்தில் 'சுருக்' கென்றது.

பிச்சைக்காரர்களுக்காக அனுதாபக் கண்ணீர் வடிக்கிறோம் நாம். ஆனால் நம் வாழ்க்கை எவ்வளவு கேவலமாக இருக்கிறது?

விளக்கு வைத்த பிறகு வீட்டுப் பொருள்களைக் கொடுத்தால் குடும்பத்தின் இலட்சுமியே போய் விடுவாள் என்று குடும்பப்பெண்கள் அஞ்சுவார்கள். அது கோமதிக்கும் தெரியாததல்ல...! ஆயினும், பகலில் எடுத்துச் சென்றால் நமக்கு மானக்கேடு என்று கருதி இருளில் யார் கண்ணிலும் படாமல் வீட்டுச் சாமானை அடகுவைக்க எடுத்துச் சென்றிருக்கிறாளே... அவளை எந்த வார்த்தைகளால் நான் போற்றுவது...?

"அம்மா போய் ரொம்ப நேரமாச்சு! இன்னும் காணலே. வர்றீங்களா அப்பா, போய்ப் பார்த்துக்கிட்டு வருவோம் அந்த வீடு எனக்கும் தெரியும்" என்ற மீனு என் பதிலை எதிர்பாராமல் முன்னே நடந்தாள் நான் நடைப்பிணமாக அவளைத் தொடர்ந்தேன்.

புகைவண்டி நிலையத்திற்கருகில் ஒரு கூரைவீடு.

"அப்பா! இந்த வீடுதாம்ப்பா...!"

நானும் மீனுவும் வெளியில் நின்றோம். உள்ளேயிருந்து பேச்சுக்குரல் கேட்டது.

"அதெல்லாம் முடியாது'ம்மா. விளக்கு வைச்சப்புறம் உயிரே போச்சுன்னாலும் ஒரு நயா பைசா கொடுக்கமாட்டேன். ஒரு வாரத்தில் மீட்டுக்கணும் என்ற 'கண்டிஷன்லே' தானே அண்ணிக்கு அந்தக் கம்மலுக்கு ரூபா கொடுத்தேன். பத்து நாளாகிப் போச்சு, இன்னும் அதை மீட்டுக்கலே. நாங்க மாசத்துக்கொரு தடவை ஊரு ஊராப் பிழைக்கப் போய்க்கிட்டிருக்கிறவங்க. ஒரு மாசத்துக்குத்தான் இந்த வீட்டை வாடகைக்கு எடுத்திருக்கிறோம். எங்களுக்கு ஒரே ஊரில் தங்கியிருக்க முடியாது. நீங்க என்ன பண்ணுவீங்களோ எனக்குத் தெரியாது. நாளைக்கு அந்தக் கம்மலே மீட்டுக்குங்க. பிறகு வேண்டுமானால், இந்தச் செப்புக் குடத்துக்கு ஒரு அஞ்சோ பத்தோ தர்றேன்."

கடுமையான பாறை பிளப்பதைப்போல அன்பு, கருணை, மட்டு, மரியாதை எதுவுமே இல்லாத கரகரத்த குரல் கொடூரமாக ஒலித்தது.

"போங்களேம்மா! இன்னும் ஏன் நின்னுக்கிட்டிருக்கீங்க? அதுதான் எங்க அப்பா சொல்றாரே — உங்களுக்குப் புரியலே...?"

ஒரு பெண்ணின் குரல் கோமதியை விரட்டியது.

இந்தக் குரல்களை எங்கேயோ கேட்டிருக்கிறோம்.

சன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன் விளக்கு வெளிச்சத்தில் அறை முழுவதும் நன்றாகத் தெரிந்தது.

அன்று மதியம் மதுராந்தகத்தில் சாலையில மயங்கி விழுந்த அந்தக் கிழவன் ஒரு ஓட்டை நாற்காலியில் கொடுமையே உருவாய் அமர்ந்திருந்தான்; அவன் அருகில் அந்தப் பிச்சைக்காரப் பெண் காஞ்சனா முகத்தில் சற்றும் மலர்ச்சியில்லாமல் வெறுப்பை உமிழும் கண்களால் கோமதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவர்கள் இருவர் எதிரில் என் மனைவி கோமதி உடல் குன்றி மனம் குன்றி அவமானத்தால் தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள்.

எவ்வளவு சுலபத்தில் அந்தக் கிழவனின் நடிப்பையும் அந்தப் பெண்ணின் நடிப்பையும் கண்டு நான் ஏமாந்து விட்டிருக்கிறேன்! நான் விரைந்து வீடு வந்தேன்.

5

அறையில் அமர்ந்திருந்த எனக்கு என் மீதே ஒருவித வெறுப்பு ஏற்பட்டதால் வியர்த்துக் கொட்டியது.

கோமதியை அழைத்து அந்தக் கிழவனும் பெண்ணும் உலகை ஏமாற்றிப்பிழைக்கிறார்கள் என்பதைக் கூறினேன்.

"நான் ஆறு குழந்தைகளைப் பெற்று விட்டேனே தவிர இன்னும் உலகத்தில் கருத்தோடு வாழ்வதற்குத் தெரிந்து கொள்ளவில்லை, கோமதி! அடடா...! உலகத்தில் மனிதர்கள் எப்படியெல்லாம் வாழ்கிறார்கள்..."

என் முகத்தில் துளிர்த்த வியர்வையைத்தன் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டே கோமதி என்னை அமைதிப்படுத்தினாள்.

"போகட்டும்...விடுங்கள்! மற்றவர்களை ஏமாற்றி வயிற்றை வளர்க்கும் வாழ்வும் ஒரு வாழ்வா? உண்மையிலேயே பிச்சையெடுப்பவர்களை விட இப்படிப் பட்ட வஞ்சகர்கள்தாம் அதிகம் இரக்கப்படத்தக்கவர்கள். வயிற்றுப் பிழைப்பிற்காகப் பலவித பொய்யுரைகளைச் சொல்லி நம்மை ஏமாற்றுகிறார்கள் என்பதை நாம் உணர்ந்தும்கூட அந்த ஈன நிலைக்கு ஆளாகிவிட்ட பொய்யர்களுக்கு உதவுவதில் ஒருவித இனம் தெரியாத இன்பமும் ஏற்படுகிறது" என்றாள்.

"நீ என்னவோ தயாள சிந்தையால் இதை சர்வ சாதாரணமாகச் சொல்லி விட்டாய், கோமதி! சற்றுச் சிந்தித்துப்பார்த்தால் இந்த ஒரே ஒரு நிகழ்ச்சியில் இன்றைய சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளும் வாழ்க்கைப் பிரச்சினைகளும் எவ்வளவோ அடங்கியிருப்பது நன்றாகத் தெரியும்"

"சரி...சரி! மனதை ஏன் அதிகமாகக் குழப்பிக் கொள்கிறீர்கள்? பக்கத்துவீட்டு அம்மாளிடம் அரைப்படி அரிசி வாங்கிச் சமைத்து ரசம் வைத்திருக்கிறேன். குழந்தைகள் பசியால் வாடுகின்றனர். எழுந்திருங்கள்.. சாப்பிடுவோம்" என்று எழுந்தாள் கோமதி.

எனக்கும் குழந்தைகளுக்கும் உணவு பரிமாறினாள். பசியால் களைத்திருந்த குழந்தைகள் ஆர்வத்துடன் சாப்பிடத் தொடங்கினர்.

வாசற்புறத்திலிருந்து 'அம்மா, தாயே...இராப்பிச்சை தாயே... ஒருபிடி சோறு போடுங்க மகராஜி' என்று யாரோ ஒரு பிச்சைக்காரனின் குரல் கேட்டது.

நானும் கோமதியும் ஒருவரை ஒருவர் காரணமில்லாமல் பார்த்துக்கொண்டோம். சோற்றுப் பானை காலியாக இருந்தது!

(41-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்கக் கல்வி முறை—அன்றும் இன்றும்

(ஆல்வின் ஸி. என்ரிக்,—"ஓவர்சீஸ்" 1962 செப்டம்பர் இதழில் வெளியானது.)

அமெரிக்கக் குடியரசு நிறுவப்பட்டது முதல் நாட்டுத்தலைவர்கள், நாட்டு மக்கள் ஆகியோரின் அபிலாஷைகள் நிறைவேறுவதற்குக் கல்வி இன்றியமையாததென்று கருதப்பட்டது. எனவே நியூ இங்கிலாந்திலிருந்து தெற்கேயும், மேற்கேயும், நாடு விரிவடைய விரிவடைய, கல்வியும் விரிவடைவதாயிற்று. புது வகைக் கல்வி நிலையங்கள் பெருகின. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ற முறையில் கல்வி முறைகள் அமைக்கப்பட்டன. அமெரிக்கக் கல்வி முறை பல்வகைப்பட்டதாக விளங்கலாயிற்று.

எல்லாரும் கல்வி பெற வேண்டும் என்பதே முக்கிய நோக்கம். 1642-ம் ஆண்டிலேயே மாஸச்சூஸெட்ஸ் விரிகுடாக் காலனியில் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி கற்பிக்கவேண்டும் என்னும் முதல் பொதுச் சட்டம் நிறைவேறியது. ஆரம்பப் பள்ளியில் மட்டுமல்ல, உயர்தரப் பள்ளி, கல்லூரி ஆகியவற்றிலும் ஒரே விதமான கல்வியும் சமத்துவ வாய்ப்பும் மக்கள் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே அடிப்படைக் கொள்கையாக இருந்தது.

அமெரிக்கப் பள்ளிகளும் கல்லூரிகளும் வளர்ச்சியுற்று எல்லாருக்கும் கல்வி வழங்கும் முறையில் மாறுதல் அடைந்துள்ளன. இவ்வுண்மையை முற்கால வரலாறு காட்டும். தொடக்கத்தில் நிறுவப்பட்ட ஆரம்பப் பள்ளிகளெல்லாம் தனியார் நிதிகளாலேயே நடைபெற்றன, எனினும் வரிகளால் நடத்தப்படும் கல்வி முறைவிரைவில் உருவாயிற்று. கல்லூரிக் கல்விக்கு மாணவர்களை ஆயத்தம் செய்யும் லத்தீன் இலக்கணப் பள்ளிகள் தோன்றலாயின. செல்வக் குடும்பங்களில் பிறந்தவர்களே அப்பள்ளிகளில் பயின்றார்கள். ஏழைகளும் நாட்டுப் புறச் சிறுவர்களும் அக்கல்வி கற்கும் வாய்ப்புப் பெறாது போயினர்.

அமெரிக்காவில் மக்கள் குடியேறிய காலத்தில் அவர்கள் குடியேறிய பகுதிகள் காலனிகள் எனப்பட்டன. அந்தக் காலனிகளில் பிரிட்டிஷ் முறையைத் தழுவிக் கல்லூரிக் கல்வி அமைக்கப்பட்டது. குருமார்கள், அரசாங்க அதிகாரிகள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள் ஆகியோர் வேண்டியிருந்ததால் அத்தகைய கல்வி வழங்கப்பட்டது. அமெரிக்காவில் நிறுவப்பட்ட முதல் கல்லூரி ஹார்வர்டு கல்லூரி. அது 1636-ல் தோற்றுவிக்கப்பட்டது. திருச்சபைக் கண்காணிப்பு, அரசாங்க ஆதரவு, தனியார் உதவி ஆகிய மூன்று

அம்சங்களும் உள்ளதாக அது ஆரம்பத்திலேயே விளங்கியது.

நிலமானியக் கல்லூரிகளும் பல்கலைக் கழகக் கருத்தும்

அமெரிக்காவின் எல்லை விரிவடைந்து கொண்டே போயிற்று. புதிய நிலைமைக்கு ஏற்ற உயர்தரக் கல்வி நிலையங்கள் தோன்ற வேண்டியதாயிற்று. எனவே 1862-ல் அமெரிக்கச் சட்ட மன்றம் நிறைவேற்றிய ஒரு சட்டத்தால் நிலமானியக் கல்லூரிகள் ஏற்படலாயின. வளர்ச்சியடையும் நாட்டுக்கு மிகவும் முக்கியமான துறைகளில் உயர்தரக் கல்வி வழங்கவே அவை நிறுவப்பட்டன. நியூ இங்கிலாந்தில் (பிரிட்டிஷ் முறையைத் தழுவி) நிறுவப்பட்ட கல்லூரிகள் டாக்டர்கள், வழக்கறிஞர்கள், குருமார்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளித்தன. ஆனால் எல்லைப் புறத்துக்கு வேளாண்மையிலும் இயந்திரக் கலையிலும் பயிற்சி பெற்றவர்கள் வேண்டியதாயிற்று. எனவே, நில மானியக் கல்லூரிகள் அதற்கு வழி செய்தன. அதுவுமல்லாமல் அவை வேளாண்மை ஆராய்ச்சிக்கும் ஆராய்ச்சியின் பலனை நாட்டில் பரப்பும் பலன் விஸ்தரிப்புப் பணிக்கும் ஏற்பாடு செய்தன.

அதே காலத்தில் ஆரம்பக் கல்வி அனைவருக்கும் வழங்கப்படுவதாயிற்று. பொது உயர் நிலை பள்ளிகளும் தொழில் நுட்ப உயர் நிலை பள்ளிகளும் விரைவாகத் தோன்றலாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுவில், அமெரிக்க மக்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் பொதுக் கல்வி முறையை நிலைநாட்ட முயன்றார்கள்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட அமெரிக்கர் ஐரோப்பாவில் முக்கியமாக ஜெர்மனியில் கல்வி கற்றுத் திரும்பினர். அமெரிக்காவிலும் பல்கலைக் கழகங்கள் தோன்ற வேண்டும் என்னும்

(39-ம் பக்கத் தொடர்ச்சி)

என் பெரிய பெண் மாலா, படித்துவிட்டு அப்போதுதான் சாப்பிட வந்தாள். அவள், தனக்குப் போட்டு வைத்திருந்த இலையிலிருந்து சிறு தட்டில் கொஞ்சம் சோறு எடுத்துக் கொண்டு போய்ப் பிச்சைக்காரனுக்குப் போட்டுவிட்டு வந்தாள்.

பக்கத்து வீட்டுப் பையன் உரக்கப் படித்துக் கொண்டிருந்தது காதில் விழுந்தது.

'காம்பும் இதழும் வாடவாட நறுமணத்தை அதிகமாக நல்கும் மகிழ மலரைப்போல — வறுமையால் துன்பப்பட்டாலும் துயர் உற்றாலும் ஈரநெஞ்சத்துடனும் மனிதத் தன்மையுடனும் வாழும் குடும்பமே மிகவும் சிறந்த குடும்பம். கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே. அதுபோல் சங்கு சுட்டாலும் வெண்மையே தரும்...'

— அமுதசுரபி.

கருத்தை அவர்கள் எடுத்துரைக்கலானார்கள். 1876ல் ஜான்ஸ் ஹாபகின்ஸ் பல்கலைக் கழகம், ஜெர்மன் பல்கலைக் கழகங்களைத் தழுவி நிறுவப்பட்டது மற்றப் பல்கலைக் கழகங்கள் பட்ட மேற்படிப்புத் திட்டங்கள் நடத்த அது வழி காட்டியது.

இன்றைய கல்வி நிலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் முற்போக்குக் கொள்கை அமெரிக்கக் கல்வியைப் பாதித்தது லாரன்ஸ் கிரமின் கூறியுள்ளது போல, அக்காலத்தில் நாட்டின் அரசியலில் பரவிய லிபரல் கொள்கையினின்று தோன்றியதே இந்த முற்போக்குக் கொள்கை. தீவிரவாதிகள் கட்டுப்பாடற்ற முற்போக்கைப் புகுத்துவதற்கு இந்தக் கொள்கையைப்பயன் படுத்தலானார்கள். ஆயினும் அதனால் ஒரு நன்மை விளைந்தது. மக்கள் பண்பாடு கல்வி முறையில் மலர வேண்டும் என்னும் எண்ணத்தை இது கல்வித்துறை அறிஞர்களுக்கு ஊட்டியது.

இன்றைய அமெரிக்கக் கல்வி உண்மையாக ஒரு "முறை" அல்ல. உலகத்தில பல நாடுகளில உள்ளது போல் பள்ளிகளையும் கல்லூரிகளையும் கண்காணிக்கும் மத்திய அமைப்பு ஒன்றும் அமெரிக்காவில் இல்லை கல்வி ஒரு முறைப்பட்டதாக இல்லாததால் சில அனுகூலங்கள் உள்ளன. அது பலவகைப்பட்டதாகவும் மக்களின் கண்காணிப்புக்கு உட்பட்டதாகவும், புதுமை புகுத்தக் கூடியதாகவும் உள்ளது. பிரதி கூலங்களும் உண்டு. அந்தந்த இடத்து நிதிகளைக்கொண்டு கல்வி நடைபெறவேண்டியிருப்பதால் கல்வித் தரம் குறைகிறது; கல்வி வாய்ப்புக்கள் எல்லா இடங்களிலும் ஒரே விதமாக இல்லை; அந்தந்த இடங்களில ஆதிக்க முள்ளவர்கள் அளவு கடந்து அதிகாரம் செலுத்துகிறார்கள்; நெடுங்காலச் சீர்திருத்தங்கள் மிகவும் மெதுவாகவே மேற் கொள்ளப் படுகின்றன.

எல்லாப் பிள்ளைகளும் கற்பதற்கு உரிமையுள்ள பொதுப் பள்ளிகள் இருந்தாலும், தனியார் பள்ளிகளும், தனிப் பிரிவினர் கல்வி நிலையங்களும் உள்ளன. பலவகைத் தன்மை, உரிமை ஆகிய மரபுகளுக்கு ஏற்ப அவை நடைபெறுகின்றன.

உயர் நிலைப் பள்ளிகள்

அமெரிக்காவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் கட்டாய உயர் நிலைப்பள்ளிக் கல்வி முறை நிலவுகிறது. ஆகலால் உயர் நிலைப் பள்ளிகளின் இறுதி வகுப்புகளில் பயிலும் மாணவர் தொகை சென்ற 50 ஆண்டுகளில இருமடங்காகியுள்ளது. நாட்டில் 17வயதுள்ளவர்களில் 70 சதவீதத்தினர் கல்வி பயில்கின்றனர்; உயர்நிலைப் பள்ளிகள் மிகப் பெரியவையாக உள்ளன.

அவற்றில் எல்லாருக்கும் பயன் படும் பரந்த பாடத் திட்டங்கள் நடக்கின்றன. திறமை மிக்க மாணவர்களும் சாதாரண மாண வர்களும் படிக்கக் கூடிய வை உள்ள பாடத் திட்டங்கள் அவை. பல வகைப் பாடங்கள் உள்ள இந்தக் கல்வி முறை சரி யான அமெரிக்க முறை. ஜன நாயக நாட்டில் தோன்றக்கூடிய முறை அதுவே.

பலவகைப் பாடங்கள் உள்ள உயர்நிலைப் பள்ளிக் கல்வி முறை யில் ஜனநாயகத்தின் சக்தியும் திகழ்கிறது; குறைபாடும் புலப் படுகிறது. தனி மாணவர்களின் திறமைக்கும் விருப்பத்துக்கும் ஏற்ப அது அமைக்கப் பட்டுள் ளது. எனினும், இம்முறையால் கல்வித்தரம் குறைகிறது என்றும் கல்லூரியில் மாணவர் சேரும் தகுதியை இது முக்கியமாகக் கருதவில்லை என்றும் குறை கூறு வோர் உளர்.

அமெரிக்கக் கல்லூரிகள்

கல்லூரித் திட்டங்களும் அமெரிக்காவில் பல வகைப் பட் டவை. உயர்நிலைப் பள்ளிகளில் கற்று முடித்தவர்கள் எந்தக் கல் லூரியிலும் பல்கலைக் கழகத்தி லும் சேர்ந்து படிக்கலாம். கல் லூரிகளில் எளிதாக இடம் கிடைப்பதில்லை. ஆதலால், பல மாநிலங்கள் இப்பொழுது ஜூனியர் கல்லூரிகள் நிறுவி, இரண்டாண்டுக் கல்லூரிப் பயிற்சி அளிக்கின்றன.

பொது அமெரிக்கக் கல்லூரி கள், பல்கலைக் கழகங்கள் ஆகி யவை பலவகையாக நிர்வகிக்கப் படுகின்றன. பள்ளி மாவட்டங் கள் நடத்தும் கல்லூரிகளும் மாநில அரசாங்கங்கள் கண் காணிக்கும் கல்லூரிகளும் உள் ளன. தனியார் துறையில் திருச்சபைப் பிரிவுகளைச் சேர்ந்த கல்லூரிகளும் மதச் சார்பற்ற கல்லூரிகளும் உள்ளன. ஹார் வர்டு, பிரின்ஸ்டன், யேல், ஸ்டான்போர்டு கலை நிலையங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை.

அமெரிக்காவிலுள்ள சுமார் 2,000 உயர் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களும் பலவ கைப்பட்டவர்களாக இருக்கிறார் கள். மாநில அரசாங்கப் பல் கலைக் கழக மாணவர்களின் கல் வித் திறமை ஹார்வர்டு, யேல் முதலியவற்றில் பயில்வோரின் கல்வித் தரத்துக்குக் குறைந்த தாக இருக்கிறது. ஏனெனில் சில மாநிலப் பல்கலைக் கழகங்கள் உயர்நிலைப் பள்ளி முடித்தவர்கள் எல்லாரையும் சேர்த்துக் கொள் ளவேண்டும் என்பது சட்டம். ஆனால் ஹார்வர்டு, யேல் முதலி யவை சிறந்த மாணவர்களையே சேர்க்கின்றன.

முதியோர் கல்வி

பட்டம் பெறவோ, தம் தொழி லில் முன்னேற்றம் அடையவோ, அறிவை வளர்க்கவோ விரும்பு வோர் கல்வி பயில்வதற்குச் சிறந்த ஏற்பாடுகள் உள்ளன.

தொழில் நிலையங்கள், முதியவர்கள் தொழில் நுட்பக் கல்வி பெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளன. அவை ஆண்டுக்குக் கிட்டத்தட்ட 300 கோடி டாலர் இதற்காகச் செலவு செய்கின்றன.

பல வகைப்பட்ட அமெரிக்கக் கல்வி முறையில் சில இயல்கள் தெளிவாகத் தோன்றும். முதலாவது, இன ஒதுக்கல் ஒழிப்புப் போராட்டம் பற்றிய முற்போக்கைக் குறித்து இக் காலத்தில் அதிகமாக விளம்பரம் செய்யப்படுகிறது. ஆனால் இனம், நிறம், மதம், பொருளாதார நிலைமை ஆகிய வேறுபாடுகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், எல்லாருக்கும் படிக்கும் வாய்ப்பு வழங்குவதில் அது ஒரு இயற்கையான முன்னேற்றமே யாகும். ஆதலால், அது குறித்து வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை. வேறு பல கல்விப் பிரச்னைகளைப் போல இதுவும் அமெரிக்கத் தலைமை நீதி மன்றத்தால் தீர்க்கப்பட்டுள்ளது. எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் இன ஒதுக்கல் ஒழிவதற்குச் சிறிது காலம் ஆகலாம்; மரபுகளும் முரட்டுப் பிடிவாதமும் முற்றும் மறைய வேண்டும்; அவை மறைந்து வருகின்றன.

கல்வித் துறையில் இன்று காணப்படும் இரண்டாவது போக்கு கல்வி கற்பிக்கும் தரத்தை உயர்த்தும் முயற்சியாகும். கற்பிக்கப் பயன்படும் புதிய கருவிகள், திறமைமிக்க ஆசிரியர்கள் மிகப்பல மாணவர்களுக்குக் கல்வியூட்டத் துணை செய்கின்றன. டெலிவிஷனும் கற்பிக்கும் மற்றக் கருவிகளும் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகின்றன. பௌதிகம், ரசாயனம், கணிதம், பண்பியல் கலைகள் ஆகிய உயர்நிலைப்பள்ளிப் பாடத்திட்டங்களில் அந்தப் பாடங்களில் வல்ல கல்வி அறிஞர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். இதன் பயனாகச் சிறந்த பாடத்திட்டங்கள் உருவாகின்றன. உதாரணமாக, மாஸசூஸெட்ஸ் தொழில் நுட்பக் கழகத்தின் பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சிக் குழு உயர் நிலைப் பள்ளிக்குரிய பௌதிகப் பாடங்கள் தயாரித்துள்ளது. நாடு முழுவதும் அவை பயன்படுகின்றன.

கல்வித் துறையில் ஏற்பட்டு வரும் மூன்றாவது சீர்திருத்தம் ஆசிரியருக்குப் பயிற்சி அளிப்பது பற்றியது. மருத்துவம் பயில்வோர் மருத்துவம் செய்து பழகுவது போல, ஆசிரியர்களும் கற்றுக் கொடுத்துப் பயிற்சி பெற வேண்டும். எனவே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் நான்கு ஆண்டுக் கலைக் கல்லூரிகளாக மாற்றப் பட்டுள்ளன. ஆசிரியர் சிறந்த பொதுக்கல்வி பெற்றவராக இருக்கவேண்டும் என்பதே இதன் நோக்கம்.

நான்காவது முன்னேற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது எல்லாரும் கல்வி பெற வாய்ப்பளிக்

கப்படுவது மல்லாமல் கல்வியின் தரம் சிறிதும் குறையாதிருக்க ஏற்பாடு செய்வதே அது. இவ்விரண்டும் நிறைவேறப் பலமுறைகள் கையாளப்படுகின்றன. கலிபோர்னியா மாநிலம் முழுவதும் ஒரு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. கலிபோர்னியா பல்கலைக் கழகம் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து வரும் பன்னிரண்டு பேரில் முதல்தரமான ஒரு மாணவனையே சேர்க்கிறது. அப் பல்கலைக் கழகம் நாட்டிலுள்ள மிகச் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்று. மாநில அரசாங்கக் கல்லூரிகள் மூன்று பேரில் ஒரு மாணவரைச் சேர்த்துக் கொள்கின்றன. ஜூனியர் கல்லூரிகளோ கற்க விரும்பி வருவோரையெல்லாம் சேர்த்துக் கொள்கின்றன.

ஐந்தாவது வளர்ச்சி ஒன்றும் அமெரிக்கக் கல்வியில் ஏற்பட்டிருக்கிறது. அதாவது உலக விவகாரங்கள் பற்றியும் சர்வ தேச உறவுகள் பற்றியும் கல்லூரிகள் கற்பிக்கின்றன. இத் துறைகளில் ஆராய்ச்சி நடத்த மத்திய அரசாங்கம் ஊக்கமூட்டுகிறது; பெரிய அறநிலையங்கள் ஆதரவளிக்கின்றன.

அமெரிக்காவில் கல்வி முறை மாறிக் கொண்டே இருக்கிறது. இது புதியது அல்ல. எப்போதுமே இப்படித்தான் இருந்திருக்கிறது.

(சர்வதேசக் கல்வி நிலையத்தின் 1962-ம் ஆண்டுப் பதிப்புரிமை)

"ஆரம்பக்கல்வி" ஆபீஸ்.

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 10 ரூ. 2-50.

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

வைட்டமின்களால் நன்மையே; ஆனால் அளவுக்கு மீறினால் ஆபத்து

மேற்கு ஜெர்மனி உணவு சத்து சங்கம் எச்சரிக்கை.

(கிரிஸ்டா அபெல்)

வைட்டமின்கள் உடல் வளர்ச்சிக்கு மிக அவசியமே. ஆனால் அளவுடன் இருக்கவேண்டும். அளவிற்கு மீறினால் பலனில்லாதது மட்டுமல்ல, ஆபத்தும் ஏற்படலாம். இந்த உண்மை மேற்கு ஜெர்மன் நிபுணர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்த ஆபத்துக்களைத் தவிர்க்க மேற்கு ஜெர்மன் உணவு சத்துச் சங்கம் போதியபடி பிரசாரம் செய்யத் திட்டமிட்டுள்ளது. குழந்தைகள் வளர்ப்பில் தாய்மார்கள் இவ்விஷயமாக மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியம்.

மேற்கு பெர்லின் – (டாட்) வைட்டமின்களை முறைதவறிப் பயன்படுத்தினால் அதனால் பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. என்பதை விவரிக்கும் ஒரு கட்டுரையைப் பிரபல மேற்குஜெர்மன் பத்திரிகை ஒன்று பிரசுரித்திருந்தது. எந்த மருந்தை உட்கொண்டாலும் அதற்கு ஒரு அளவு உண்டு. எப்பேர்ப்பட்ட நல்ல புஷ்டி தரும் மருந்தென்றாலும் ஒரு அளவிற்கு மேற்பட்டால் அதனால் பலன் இராது என்பதுடன் மட்டுமல்ல, ஆபத்தான பிரதிகூலங்கூட ஏற்படும். சமீப கால அனுபவங்களிலிருந்து அத்யாவசியமான வைட்டமின்கள் கூட அளவுக்கு மீறி உபயோகிக்கப்பட்டால், அதனால் கேடு விளைகிறது என்பது தெரியவந்துள்ளது.

ஒரு வாலிபன் சில மாதங்களாகவே தலைவலிக்கு ஆளாயிருந்தான். அவனுடைய தலை மயிரும் உதிர்ந்து கொண்டே வந்தது. அவனைப் பரீட்சித்த டாக்டர்கள் மண்டையில் ஏதோ கட்டி ஏற்பட்டிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டனர். ஆனால் அப்படி எதுவுமில்லை என்பது நாளடைவில் தெரியவந்தது. தலைவலி போகாமல் இருக்கவே, அவ்வாலிபன் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டான். மூன்று வார சிகிச்சையில் தலைவலியும் நின்றது. மயிர் உதிருவதும் நின்றுவிட்டது மயிர் மீண்டும் வளரவும் தொடங்கிவிட்டது. அவன் வைட்டமின் 'ஏ' மாத்திரையை தினம ஒன்று வீதம் உட்கொண்டு வந்தான். சில நாட்கள் கழித்து மீண்டும் தலைவலி ஏற்பட்டுவிட்டது. இதற்குக் காரணம் வைட்டமின் மாத்

திரைகளைத் தேவைக்கு அதிகமாகவே உண்டாதுதான் என்று டாக்டர்கள் கண்டுபிடித்து விட்டனர். அவ்வாலிபன் 6 மாதம் விடாமல் வைட்டமின் 'ஏ' மாத்திரைகளை உட்கொண்டு வந்திருக்கிறான்.

குழந்தைகளுக்கு இந்த அதிக டோஸ் மருந்து மிக ஆபத்தானவை அதிகமாக வைட்டமின்கள் கொடுத்தால் சீக்கிரமாகவும் நன்றாகவும் வளரலாம் என்பது தவறான அபிப்பிராயம் ஆகும்.

ஆகார வகைகளில் காரட்டு, சிவப்பு முள்ளங்கி இவைகளில் 'ஏ' வைட்டமின் அதிகம் உண்டு. 100 கிராம் காரட்டுகளில் குழந்தைகள் சாப்பிடும் அளவு வைட்டமின்களை விட 6மடங்கு அதிகமான 'ஏ' வைட்டமின்கள் உள்ளன.

குழந்தைகள் எலும்பு வளர வைட்டமின் 'ஏ' மிகவும் அத்தியாவசியம் குழந்தைகளின் வளர்ச்சியில் அக்கறையுள்ள தாய்மார்கள் இந்த வைட்டமின் அதிக அளவுள்ள பொருள்களை குழந்தைகளுக்குக்கணக்குத் தெரியாமல் கொடுத்து விடுகின்றனர். அதிகப்படி வைட்டமின்களால் எலும்புகளைப் பாதிப்பது மூலம் குழந்தைகளுக்குக் கால் ஊனமாகிவிடுகிறது.

வைத்திய உதவியும் தாமதமாகக் கிடைக்கிறது. இதனால் ஆபத்துகளைத் தவிர்க்க ஜெர்மன் உணவு சத்து சங்கம் விஷயத்தை எடுத்து விளக்கிப் பிரசாரம்செய்யத் திட்டமிட்டுள்ளது.

அறிவுச் சுடர்

கருணை என்பது, செவிடர்கள் மட்டுமே கேட்கக் கூடியதும், குருடர்கள் மட்டுமே படிக்கக் கூடியதுமான ஒரு சொல் அடுக்கு. அதாவது உலகத்தில் இல்லாத ஒரு பொருள்.

—விக்டர் யூகோ

எனக்கு ஒரு பேரரசையே கொடுப்பதாக நீங்கள் ஆசைகாட்டினாலும் சரி, அதற்காக, நான் என்னுடைய கருத்துக்களை ஒரு போதும் மாற்றிக்கொள்ளமாட்டேன். எனக்கு என் சுதந்தரம் தான் பெரிது; பேரரசு அல்ல.

—பைரன்

இளமையில் பகைமை, பொறாமை, முதலியன நெளிதல் அரிது. அதன்கண் அன்பும் அருளும் பொலிதல் இயல்பு.

—திரு. வி. க.

வளரும் சமுதாயம்
பிஞ்சு உள்ளங்களில் சினிமா மோகம்.

தகப்பனுரின் முக்கியத்துவம் குறைவதாக மனேதத்துவ நிபுணர் கருத்து.

(ஸிபில் ஷீர்)

பிராங்க்பர்ட் (டாட்) — வளரும் சமுதாயத்தினரின் லட்சியங்கள் என்ன? இவ் விஷயமாக மனத்த்துவ நிபுணர் டாக்டர் ஹுக்கரட் மேற்கு ஜெர்மனியிலுள்ள 50 பள்ளிகளில் படிக்கும் 13 வயது முதல் 16 வயதுவரையுள்ள மாணவர்களைக் கேள்விகள் கேட்டு அவர்கள் கருத்தை அறிந்திருக்கிறார்.

"நீங்கள் வீட்டிலும், பாடப் புத்தகங்களின் மூலமும் ரேடியோ, டெலிவிஷன் மூலமும் எவ்வளவோ பேர்களைப்பற்றிக் கேட்டறிந்திருப்பீர்களே அவர்களில் நீங்கள் யாரைப்போல் இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்" என்ற கேள்வி அவர்களிடம் கேட்கப் பட்டது. பெரும் பாலான மாணவிகள் தங்கள் தாயாரைப் போலவே இருக்க விரும்புவதாகக் கூறினராம். வெகு சிலரே தங்கள் தந்தையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். நவீன கால சமுதாயத்தில் தகப்பனுரின் முக்கியத்துவம் குறைந்து வருகிறதென்பதையே இது காட்டுகிறது என்று மனேதத்துவ நிபுணர் கூறுகிறார்.

ஒவ்வொரு 6 பெண்களில் ஒருத்தி தன் ஆசிரியரைப் போல் தான் விளங்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார்களாம்.

டெலிவிஷன்களில் சினிமா நட்சத்திரங்களைக் கண்ட சிலர் அவர்களைப்போல் விளங்க வேண்டும்என்றகருத்தைத் வெளியிட்டுள்ளனர். இவர்களில் பலர் சினிமா நட்சத்திரங்களின்படங்களைத்தங்கள் அறைகளில் மாட்டியுள்ளனர். பாதிக்கு மேற்பட்டவர்கள் தாங்கள் மதாபிமான முள்ளவர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர் இவர்களில் பெரும்பாலோர் அரசியலில் அவ்வளவாக அக்கறைகாட்டவில்லை. (யூ.பி.எஸ்.)

கவிஞர் பெருமகன் லாங்பெலோ

அழியாப் புகழ்பெற்ற அமெரிக்கக் கவிஞர்களில் ஒருவர் ஹென்றி வாட்ஸ்வொர்த் லாங்பெலோ. அவர் தமது காலத்திலேயே மற்ற அமெரிக்கக் கவிஞர்களைவிடச் சிறந்த புகழ்பெற்றார். மக்கள் அவருடைய கவிகளை விரும்பிப் படித்தனர். இன்றும் அவரது புகழ் மங்கவில்லை. அமெரிக்காவிலுள்ள பள்ளிக்கூடங்களிலெல்லாம் அவருடைய கவிகள் படிக்கப் படுகின்றன; மாணவர்கள் அவற்றை மனப்பாடம் செய்கிறார்கள்.

அமெரிக்க இலக்கியத்துக்கு அவர் ஆற்றியுள்ள பணி இணையற்றதாகும். உலக இலக்கியத்துக்கும் அவர் பணியாற்றியுள்ளார். சிறந்த உணர்ச்சிகளைச் செம்மையான கவிதைகளில் பொதிந்து உரைத்துள்ளார் கவிஞர் லாங்பெலோ. எதன் பொருட்டு வாழவேண்டும், எப்படி வாழவேண்டும் என்பதை அவருடைய கவிகள் உணர்த்துகின்றன. எனவே அவை அழியாமல் என்றும் வாழ்கின்றன.

உணர்ச்சி யூட்டும் கவிகள் வரைவதில் அருந்திறன் அமையப் பெற்றவர் லாங்பெலோ. ஒரு தடவை அவர் இயற்றிய "கப்பல் கட்டுகல்" (The Building of the Ship) என்னும் கவிதை ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனுக்குப் படித்துக் காட்டப் பட்டது. ஜனாதிபதியின் "கண்களில் நீர் மல்கியது; கன்னங்கள் நனைந்தன." சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு, "உணர்ச்சியூட்டும் இத்தகைய திறன் அமைவது பெறத்தகும் பெரும் பேறு" என்று அவர் சொன்னார்.

ஹென்றி வாட்ஸ்வொர்த் லாங்பெலோ அமெரிக்காவில் மெயின் மாநிலத்தில் 1807-ல் பிறந்தார். அவருடைய தந்தையார் திறமை மிக்க வழக்கறிஞர்; மாநில சட்டமன்ற உறுப்பினராகவும் அவர் இருந்தார். அவருடைய தாய் வழிப் பாட்டனார் அமெரிக்க விடுதலைப் போரில் வீரராகத் திகழ்ந்தவர். பகற் கனவு காண்பது அவரது அன்னையின் இயல்பு. செயல் திறமையும் முயற்சியுடைமையும் அவரது தந்தையின் பண்புகள். எனவே, தாயின் இயல்பும் தந்தையின் தன்மையும் லாங்பெலோவிடம் ஒருங்கே அமைந்திருந்தன. இருவகைப் பண்புகளும்மலர்வதற்குக்கவிதை இயற்றுவது அவருக்குச் சிறந்த வாய்ப்பளித்தது போலும்.

அவரது எழுத்துக்களில் பழைமை மணம் கமழ்கிறது. அதற்குக் காரணம் அவரது பண்பேயாகும். இதனை அவர் எழுதிய The Wreck of Hesperus என்பதில் நன்கு காணலாம். அது நிகழ்ந்து இரண்டு வாரத்துக்குள் நிகழ்ச்சி நடந்த இடத்துக்கு ஐம்பது மைல் தூரத்துக்குள் அதுவரையப் பெற்றது

எனினும், நெடுங்காலத்துக்கு முன் நடந்த நிகழ்ச்சி போலத் தோன்றுகிறது; ஆகவே பழைமை மணம் அதில் வீசுகிறது.

லாங்பெலோ குட்டையானவர் எனினும் இனிய தோற்றமுள்ளவர். அமைதியும் அடக்கமும் அவரது இயல்பு; எனினும் அவர் பேசாமல் இருப்பவர் அல்லர். அவர் நன்றாக உடுத்துவார்; இனிமையாகப் பழகுவார்; சிரிப்பு அவருக்கு விருப்பம். அவர் நகைச் சுவை நிறைந்தவர்; வசதிகளை விரும்புபவர்.

மெயின் மாநிலத்திலுள்ள பிரன்ஸ்விக் நகரில் போடோயின் கல்லூரியில் அவர் பயின்றார். அக்காலத்தில் நத்தானியேல் ஹாதார்ன் அவரோடு கல்வி கற்றார். மாணவராக இருந்தபோது இலக்கியத் துறையில் புகழ்பெற வேண்டும். என்னும் அவா லாங்பெலோவுக்கு உண்டாயிற்று. அது பற்றி அவர் தம் தந்தைக்கு எழுதினார். கல்லூரியில் புதிதாய் நிறுவப்பெற்ற தற்கால மொழித் துறைப் பேராசிரியர் பதவி ஏற்கத் தகுதி பெறும் பொருட்டு, தந்தையார் அவரை ஐரோப்பாவுக்கு அனுப்பினார். மூன்றரை ஆண்டுக்குப் பின் அவர் அமெரிக்காவுக்குத் திரும்பி வந்தார். ஐந்து ஆண்டுகள் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். பிரயாணக் கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றையும், பாடப் புத்தகங்கள் சிலவற்றையும், ஐரோப்பிய மொழி நூல்களின் மொழி பெயர்ப்புக்களையும் அவர் வெளியிட்டார். அதன் பின் இரண்டாந் தடவையாக லாங்பெலோ ஐரோப்பாவுக்குச் சென்றார்; மனைவி காலமானார்; அவர் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பணி செய்யச் சென்றார்.

ஆரம்ப அமெரிக்க வரலாற்றில் ஆர்வம் உள்ளவர் லாங்பெலோ. சாதாரண அமெரிக்க மக்கள் விரும்புவனவற்றிற்கு அவர் தமது கவிகள் மூலம் சிறப்பளித்தார். அமெரிக்காவின் முதல் தேசிய எழுத்தாளர் அவரே சிறிது காலம் மதிக்கப்பட்டு, பின்னர் ஒதுக்கப்பட்டவர் அல்லர் லாங்பெலோ. அவர் எழுதியவற்றை அனைவரும் படித்து மகிழ்ந்தனர்.

அமெரிக்காவின் முதல் சர்வதேசக் கவிஞரும் அவரே. அவரது கவிகள் உலக இலக்கியத்துக்கு அமெரிக்காவை அறிமுகப் படுத்தின. மற்ற நாட்டினர் மதித்த முதல் அமெரிக்க கவிஞர் அவரே. அவர் எழுதியவை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன.

அமெரிக்க இலக்கியத்துக்கு லாங்பெலோ செய்த பணி புதிய பொருள்கள் பற்றி எழுதியது மட்டும் அன்று. அமெரிகக இலக்கியத்தில் புதிய பாணி ஒன்றையும் அவர் படைத்தார். கவிதையில் நெடுங் கதை ஒன்றைக் கூறுவதே அவரது புதிய பாணி.

"ஹியாவதா" என்னும் கவிதையில் லாங்பெலோவின் சிறந்த

(53-ம் பக்கம் பார்க்க)

அன்பு-ஒற்றுமை-சமாதானம்

பேராசிரியர் எம். ரத்தினசாமி

போப்பாண்டவர், இருபத்து மூன்றாவது அருளப்பர் அவர்களுடைய மறைவு, சமீபகால வரலாற்று அரங்கிலிருந்து ஒரு மகா புருஷனை அகற்றி விட்டது. ஏனெனில் அவர் பதவி வகித்த மிகக் குறுகிய நாலரை ஆண்டு காலத்திற்குள், கீழை நாடுகளிலும் மேலைநாடுகளிலும் உள்ள எல்லா மதத்தினரிடமிருந்தும், மதமே இல்லாதவர்களிடமிருந்தும், எல்லா அரசியல் கட்சிகளிடமிருந்தும், சமூக கோஷ்டிகளிடமிருந்தும் பெரும் புகழைப் பெற்று விட்டார்.

மேற்கு நாடுகளிலிருந்து மட்டுமல்ல; கம்யூனிஸ்ட் நாடுகளிலிருந்தும் அவர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துப் புகழ்ந்துரைகள் வந்து குவிந்துள்ளன.

இத்தகைய உலகப் புகழை அவர் எய்தியதற்குக் காரணம், உலகத்துக்கே பொதுவான ஒற்றுமை, சமாதானம் ஆகிய இரு லட்சியங்களைக் கடைப் பிடித்து, அதற்காகவே உடல் நலத்தையும் புறக்கணித்து, காலத்துக்கு முன்பே மரணத்தைத் தேடிக் கொள்ளுமளவுக்கு இரவு பகலாக உழைத்து வந்ததுதான். இந்த இரு லட்சியங்களையும் அடைவதற்காகவேதான், மனித வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக உலகம் பாடுபட்டு வருகிறது. இந்த இரு லட்சியங்களும், மனித குலத்தின் நல்வாழ்வுக்கு மிகவும் அவசியமும் இன்றியமையாதவையுமாக இருப்பதால்தான், இந்த லட்சியங்களைக் கடைப் பிடித்து நிறைவேற்றுவதற்காக, உண்மையாகவும் உறுதியாகவும் உழைப்பவரை மனித குலம் நன்றிப் பெருக்கோடு போற்றிப் புகழ்கிறது.

போப்பாண்டவருடைய சாதனைகள் எவ்வளவு வியக்கத்தக்கவோ, அதே போன்றுதான் அவர் இப்பதவி ஏற்க நேர்ந்த வரலாறும்.

1881-ம் ஆண்டில் வட இத்தாலியிலுள்ள பெர்கமோ என்ற கிராமத்தில், ஒரு ஏழைக் குடியானவன் குடும்பத்தில் பிறந்த இவர், சிறு வயதிலேயே சமயத் துறையில் அக்கறை கொண்டு, குருவாகும் விருப்பத்தை வெளிப்படுத்தினார். அவருடைய பெற்றோர்களிடமிருந்து அதற்கு எதிர்ப்பு இல்லாதது மட்டுமல்ல; அந்த வட்டாரத்துப் பங்கு குருவும் அவருக்கு உதவி செய்ய முன் வந்தார் 1900ம் ஆண்டில், அவர் ரோமாபுரிக்குச் சென்று சமயப் பள்ளியில் தேர்ச்சி பெற்றதோடு, இளம் இத்தாலியர்களை வாடிகன் தூதுவர் குழாமுக்குப் பயிற்சியளிக்கும் கழகத்திலும் சேர்ந்து தேர்ச்சி பெற்றார். மிக

விரைவில் அவர் ஒரு மேற்றிராணியாராக (பிஷப்பாக) ஏற்றுக் கொள்ளப்பட்டு, வாடிகன் தூதுவராக்கப்பட்டார். வாடிகன் தூதுவராக கிழக்கு ஐரோப்பாவிலும், பல்கேரியா, துருக்கி, கிரீஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் இருபத்தைந்து ஆண்டுகள் பெரும் சேவை செய்தார். தூதுவராகப் பணியாற்றிய இந்த இருபத்தைந்து ஆண்டுகள், அவருக்குக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள அரசாங்கங்களைப் பற்றியும், மக்களைப்பற்றியும் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டியது.

சென்ற இடமெல்லாம் மக்களிடம் அவர் காட்டிய அன்பும், ஆதரவும், அவர்களைப் புரிந்து கொள்ளும் திறனும், அவர்களை அணைத்துச் செல்லும் ஆற்றலும் அவருக்கு நல்வரவையும் நன்மதிப்பையும் பெற்றுத் தந்தன.

இப்படி அவர் தியாகத்தாலும் உழைப்பாலும் பெற்றிருந்த நற்பெயர், ரோமாபுரியிலுள்ளவர்களின் கவனத்தை 1953ம் ஆண்டு கவர்ந்தது. அவர் வெனிஸ் நகரத்தில் 'ஆர்ச் பிஷப்பா'க உயர்த்தப்பட்டார். அங்கு, அந்தத் தலைசிறந்த தூதுவர் தமது பேரன்பினாலும், திறந்த உள்ளத்தாலும் தம்மைச் சேர்ந்தவர்களுக்குத் தந்தையாகவும், தலைவராகவும் திகழ்ந்தார். இந்த அனுபவம்தான், 1958-ம் ஆண்டில் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பும், அவரைத் தமக்கு அருகாமையிலிருக்கும் மக்களிடம் விசேஷ அக்கறையும் அன்பும் காட்ட உதவியது. கத்தோலிக்க உலகுக்கே தலைவராக அவர் திகழ்ந்தபோதும், ரோமாபுரி மக்களுக்கும் தாம் ஒரு பிஷப் என்பதை மறவாமல், கோவில்களில் பணி புரிவது, ஏழை எளியவர்களுக்கு ஆதரவு காட்டுவது, மருத்துவ மனைகளையும் சிறைச்சாலைகளையும் கவனிப்பது போன்ற பொறுப்புக்களை அவர் தவறாமல் செய்து வந்தார். முதன் முதலில் பரிவாரங்களோ, பதவிச் சின்னங்களோ இல்லாமல் ரோமாபுரியின் தெருக்களிலே கால் நடையாகவே சென்றவர் போப் ஜான்.

சென்ற முறை போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்கும்போது சமயத் தலைவர்களிடையே ஒற்றுமை காண முடியாமல் போனதால், ஒரு இடைக்கால போப்பாகவே கருதி அவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். அவர் நாலரை ஆண்டுகளே பதவி வகித்த போதிலும், அந்தக் காலத்திற்குள் ஒரு மாபெரும் சாதனையை அவர் புரிந்திருக்கிறார். வெவ்வேறு கோஷ்டிகளாகப் பிரிந்து செயலாற்றும் கத்தோலிக்கர்களை ஒன்று சேர்த்து இணைக்க, உலகிலுள்ள 'பிஷப்'புகளெல்லாம் பங்கு கொள்ளும்படியாக திருச்சங்கம் ஒன்றைக் கூட்டினார். இந்தப் பேரவை பற்பல கத்தோலிக்க இனத்தாரை ஒன்று சேர்க்கவும், திருச்சபையின் தோற்றத்தைச் சீர்படுத்தவும் பல வழிமுறைகளை ஆராய்ந்தது. அதன்

பணி இன்னும் முடியவில்லை; அதற்குள் அதை உருவாக்கியவர் மறைந்து விட்டார்.

ஆனால் போப்பாண்டவர் செய்த மற்றொரு சாதனை; உலகத்திலுள்ள கத்தோலிக்கர்களை யெல்லாம் நெடுங்காலமாகத் தங்கள் மதத்தின் உயர்ந்த நோக்குப்படி தங்கள் மனச் சாட்சியைப் பயன்படுத்தி மனித குலத்தின் நல் வாழ்வுக்காகப் பாடுபடுமாறு செய்வித்த தாக்கீதுதான். அதே போன்று, இந்த ஆண்டுத்துவக்கத்தில் உலகுக்கே பொதுவாக ஒரு வேண்டுகோள் விடுத்தார். எல்லா நாடுகளையும், தேசத் தலைவர்களையும் உலக சமாதானத்துக்குப் பாடுபடுமாறு வேண்டினார். இந்த வேண்டுகோள் தான் கம்யூனிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் அல்லாதார் இருவரிடமிருந்தும் பாராட்டுதலைப் பெற்றது. மாறுபட்ட நோக்குடைய குருஷ்சேவையும் கென்னடியையும் அதை மாபெரும்சமாதான சாசனமாகப் பாராட்டச் செய்தது.

போப்பாண்டவர், இருபத்து மூன்றாவது அருளப்பர் தமது வாழ்க்கையை ஊக்குவித்த உலக ஒற்றுமை, சமாதானம் என்ற இரு லட்சியங்களுக்காகவே இறுதிவரை உறுதியுடன் உழைத்து இறைவன் திருவடி சார்ந்து விட்டார்.

(50-ம் பக்கத் தொடர்ச்சி)

கவித்திறன் நன்கு புலனாகிறது. சாஸரின் காண்டர்பரிக் கதைகளையும், பொக்காஷியோவின் டெக்கமரான் கதைகளையும் வேறு பல நாட்டுக் கதைகளையும் தழுவி வழியோரச் சாவடிக் கதைகள் (Tales of Wayside Inn) என்பவற்றை அவர் எழுதியுள்ளார்.

லாங்பெலோ சரியான கலைஞர். பழைய செய்யுளியலில் அவர் புலமை மிக்கவர் என்பதை அவரது கவிகள் காட்டும். அவர் இயற்றிய செய்யுட்கள் மென்மையான ஓசையும் ஒழுக்கும் உள்ளவை. இன்னிசை பயக்கும் செஞ்சொற்களை அவர் பயன்படுத்தியுள்ளார். இக்கால ஆராய்ச்சியாளர் அவருடைய கவிகள் பற்றியும் கதைகள் பற்றியும் என்னதான் கூறினாலும், அவர் மனித குலத்தின் மாபெரும் கவிஞர்களுள் ஒருவராக என்றும் விளங்குவார் என்பது உறுதி. இளைஞருக்கும் முதியோருக்கும் அவர் எழுதியுள்ளவை உயர்ந்த குறிக்கோளையும் சிறந்த பொருள்களையும் எடுத்துரைத்து, உயிர் ஊட்டிக் கொண்டேயிருக்கும்.

மங்கலப் பொருட்கள் — தேங்காய்

ஈ. சுசீலா

மங்கலப் பொருட்கள் என்றதும் பூ, மஞ்சள், குங்குமம், பழம் இவற்றுடன் தேங்காயும் தான் நம் நினைவிற்கு வருகிறது. பிற மங்கலப் பொருட்களைவிட இந்தத் தேங்காய்க்கு உள்ள மதிப்பு சற்று அதிகம் என்று தான் சொல்ல வேண்டும். ஏன் தெரியுமா? முக்கண் பரமனார் போன்று இந்தத் தேங்காய்க்கும் மூன்று கண்கள் இருக்கின்றன அல்லவா? மேலும், வெற்றிலை, பாக்கு வைத்துக் கொடுக்கும் பழக்கத்தில் தேங்காய்க்கு மட்டும் தான் அதிக விலை கொடுக்கவும் வேண்டியிருக்கிறது. பழத்தைக்கூட ஓரணா, இரண்டணாவிற்குத் தட்டில வைக்கலாம். ஆனால் தேங்காய் வைத்துக் கொடுக்க விரும்பும்போது, குறைந்தது ஐந்தணா அல்லது ஆறணா காசு போட்டால்தானே ஒரு தேங்காயாவது வாங்க முடியும். ஒரு தேங்காய் தட்டில் இடம் நிறைந்து காணப்படும். ஆகையால் பிற மங்கலப் பொருட்களையெல்லாம்விடத் தேங்காய்க்குத்தான் அதிக மதிப்பு என்பதை எல்லோருமே ஒத்துக்கொள்வார்கள்.

தேங்காயின் தனிச் சிறப்பு

பிற மங்கலப் பொருட்களுக்கெல்லாம் இல்லாத இன்னொரு தனிச் சிறப்பும் இந்தத் தேங்காய்க்குண்டு. மஞ்சள், பூ, குங்குமம் முதலியவை எல்லாராலும் மங்கலப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டாலும், பெரும்பாலும் சுமங்கலிப் பெண்களுக்கு மட்டுமே உரியனவாக உள்ளன. ஆனால் தேங்காயோ சிறுவர் முதல் வயோதிகர் வரை ஆண் பெண் வேறுபாடின்றி எல்லோராலும் பயன்படுத்தப்படுகிறது. பள்ளிக்கூடச் சிறுவன் தன் வகுப்புத் தேர்விலே வெற்றியடைந்தால் கோயில் பிள்ளையாருக்கு ஒரு தேங்காய் உடைப்பதாக வேண்டிக்கொள்கிறான். பெரிய பெரிய மனிதர்களும் தம் வியாபாரத்திலோ, வேறு துறையிலோ வெற்றி கிடைத்தால் பிள்ளையாருக்குச் சிதறு தேங்காய் உடைப்பதாக வேண்டிக்கொள்கிறார்கள். தேங்காய் உடைக்கிற இந்தப் பேரம், அவரவர் பணச் சகதிக்கு ஏற்ற வகையில் அமைகிறது. ஒரு தேங்காய் முதல் நூற்றெட்டு என்றும் ஆயிரத்தெட்டு என்றும் எண்ணிக்கை பெருகிக் கொண்டே போகும்.

மேலும், இறைவனுக்கு அர்ச்சனை செய்யும்போதும் இந்தத் தேங்காய் உடைபடுகிறது. சிற்சில கோவில்களில் தேங்காய் மூடி ஒன்று மட்டும்தான் உடை

யவர் கைக்கு வரும். மற்றொரு மூடி உடைத்தவர் கைக்கு அதாவது குருக்களுக்குச் சென்றுவிடும் இறைவனுக்குத் தேங்காய் உடைக்கும்போது விளிம்பில் எந்தவிதக் கோணலும் இல்லாமல் அழகாக உடைந்தால் மனத்தில் நினைத்த காரியம் வெற்றி பெறும் என்று நம்புகிறார்கள். கொப்பரையாகவோ, அழுகலாகவோ இருந்துவிட்டால் சரியான சகுனம் இல்லை என்று நினைக்கிறார்கள்.

மேலும், ஒருவர்வாழ்விலேயே சிறந்த திருநாளான திருமணத்தின் போதும், ஓமம் வளர்க்குமிடத்திற்கு அருகே, கலசத்தில் தேங்காயை நிறுத்தி, அதைச் சிவபிரானாக நினைத்துப் பூசை செய்வர் — திருமணத்திற்கு வந்து செல்லும் விருந்தினர்களுக்கும் தேங்காய் கொடுத்து அனுப்பும் வழக்கம் இருந்து வருகிறது. தேங்காய் உருவம் சிறியதாக இருப்பினும் அதன்மேல் அடர்த்தியாக நார் போர்த்திக் கொண்டிருப்பதால் கல்யாணம் நடத்துபவர்க்கும் எளிதாக இருக்கின்றது. எப்படியென்றால் ஒரு காகிதப் பையில் ஒரு தேங்காயைப் போட்டு நீட்டினால் போதும் அந்த ஒன்றே வாங்குபவர் கைநிறைய இருக்கிறது. ஆகையால் பைக்குள் ஒரே ஒரு வெற்றிலையோ பாக்கு என்பதே இல்லாமல்கூட குறையாகத் தோன்றுவதில்லை. இவ்வாறு குறையை இட்டு நிரப்பும் பெருமையுடைய தேங்காய் உண்மையிலேயே பெருமையுடையதுதான்.

“வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைப் பண்ணிப்பார்” என்ற பழமொழியில் வரும் இரு கடமைகளிலும் தேங்காய் இடம் பெறுகிறது. புதுமனை புகுவிழாவில் தேங்காய் வைதீக முறைப்படி செய்யும் சடங்குகளில் இடம் பெறுவதோடு திருஷ்டி கழிப்பதற்கும் தேங்காய் பயன்படுத்தப் படுகிறது. இவ்வாறு புதுமனை புகும்போது திருஷ்டி சுற்றிவிட உதவுகின்ற தேங்காய்தான் சிறு குழந்தைகளுக்கும் திருஷ்டி நீக்கும் பொருளாக விளங்குகிறது முழுத் தேங்காய்மேல் கர்ப்பூரம் ஏற்றிவைத்துத் திருஷ்டி சுற்றுவதும் உண்டு. ஆலத்தி நடுவில் கண் கொட்டாங்கச்சியில் கர்ப்பூரத்தை ஏற்றிவைத்துச் சுற்றுவதும் உண்டு. இவ்வாறு அமங்கலமாகிய எதையும் நீக்கிவிடுகின்ற மங்கலப் பொருளாகத் தேங்காய் பயன்பெறுகிறது.

மேலும், வீட்டில் பிறந்த பெண்ணுக்குச் சீர், வரிசைகள் கொடுக்கும்போதும் இந்தத்தேங்காய் இடம்பெறத் தவறுவதில்லை. நன்றாக நார் உரித்த தேங்காய்களின்மேல் மஞ்சள்பூசி, வரிசைத் தட்டில் வைக்கின்ற பழக்கம் உள்ளது. நவராத்திரி போன்ற பண்டிகை நாட்களிலும் பெரிய சுமங்கலிப் பெண்களுக்கு வெற்றிலை பாக்குடன் தேங்காய் வைத்துக் கொடுக்கும்பழக்கமும்தேங்காய்க்குரிய மதிப்பை உயர்த்துவ

தாகவே உள்ளது. பண வசதி யுள்ள சிற்சில பெருமக்கள், இராமாயண கதா காலட்சேபத்தில் சீதாகல்யாணத்தன்று, கதை கேட்டு வருகின்ற அத்தனை பேருக்கும் தேங்காய் கொடுத்து மகிழ்வதையும் பார்க்கிறோம்.

வைதீகச் சடங்கில்

மேலும் பூர்ணகும்பம் வைத்துப் பெரியோரை எதிர்கொண்டழைக்கும்போதும், தேங்காய்தான் மேலிடத்தைப் பெறுகின்றது. மதப் பெரியோர்களை எதிர்கொண்டழைக்கும்போது பூர்ணகும்பம் வைத்தே அழைப்பர். இவ்வாறு மதப்பெரியார்களையும், நாட்டுப் பெரியார்களையும் பூர்ணகும்பம் வைத்தே எதிர்கொண்டு அழைக்கின்ற பழக்கம், பண்டைக் காலந்தொட்டே இருந்து வருவதைப் பல தமிழ் இலக்கியங்களும் காட்டுகின்றன. இன்னும் அப் பழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. கோயில் நோக்கி வரும் அடியார் திருக்கூட்டங்களையும் வெளிநாட்டுப் பெரியார்களையும் பூர்ணகும்பம் வைத்தே எதிர்கொண்டழைக்கின்றனர்.

இவ்வாறு வைதீக முறையில் முதலிடத்தைப் பெறுகின்ற தேங்காய், லெளகிகமாகவும் பல வகையில் பயன்படுகிறது. தேங்காய்க்கு உள்ளே இருக்கின்ற இளநீரின் சுவைக்கு வேறெந்த சுவையும் ஈடே ஆகாது. எங்கள் வீட்டில் பிள்ளையாருக்குப் பால் அபிஷேகம் செய்தவுடன் இளநீரும் விடுகின்ற பழக்கமாதலால், அந்த அபிஷேக தீர்த்த மகிமையை என்னுடைய சிறுதங்கையும், தம்பியும் எனக்கு, உனக்கு என்று 'உரிமைப்போர்' நடத்துவதிலிருந்தே தெரிந்துகொள்ளலாம். கோயில்களில் பெரிய பெரிய அபிஷேகங்கள் நடக்கும் போது இளநீர் அபிஷேகமும் இடையில் இடம்பெறுவதைப் பார்க்கிறோம்.

காளமேகத்தின் கவிவாக்கு

நன்றாகக் காய்கிற வெய்யிலில் அலைந்துவிட்டு ஒரு மரத்தின் நிழலில் நின்றுகொண்டு ஓர் இளநீரை வாங்கிக் குடித்தால், அந்த இன்பத்திற்கு நிகர் வேறு எதுவுமே இருக்க முடியாது. இதை உணர்ந்துதானோ என்னவோ, தமிழ்ப்பாட்டி ஒளவையாரும், தாளுண்ட நீரைத் தலையாலே தருகின்ற தென்னையைத் தம் பாட்டிலே பாடி வாழ்த்திவிட்டுச் சென்றாள். தென்னை மரத்தின் வேரிலே நீரை ஊற்றினால் அது இன்சுவையுள்ள இளநீராக, மரத்தின் மேலே கிடைக்கின்றது. ஒளவைப்பாட்டியும் இதை மனத்திலே எண்ணித்தான் ஓரிடத்தில் உதவிசெய்தால் அதற்கான பதில் நன்மை வேறோரிடத்தில் இருந்து வரும் என்கிற ஓர் உலகியல் உண்மையை, இதன்மூலம் விளக்கினார். கவிக்காசு காளமேகப் புலவரும் இந்தத் தேங்காயைத் தம் பாட்டிலே பாடாமல் விடவில்லை.

" ஓடுமிருக்கும் அதனுள் வாய்
வெளுத்திருக்கும்

னாடும் குலை தனக்கு
நாணு து—சேடியே
தீங்கான தில்லைத்
திருமலைராயன் வரையில்
தேங்காயு நாயுமெனச்
செப்பு"—என்று

தேங்காய்க்கும் நாய்க்குமாகச் சிலேடை அமைத்துப் பாடியுள்ளார். வேறு பல இலக்கியப் புலவர்களும் இளநீர், தேங்காய்க் குறும்பை ஆகியவற்றைத் தமது பாடல்களில் உவமை வாயிலாகப் பயன்படுத்தத் தவறவில்லை.

அன்றாடம் சமையலிலும் தேங்காயின் சுவை பெரிதும் விரும்பப் படுகிறது. தேங்காயைத் துருவி, கறிபோடு கலந்தால் அதன் சுவை அதிகமாகிறது. தேங்காயை அரைத்து விட்டால் கூட்டு, சுவை கூடுகிறது. தேங்காய்ப் பால் பிழிந்துவிட்டால், பாயசம் மேலும் சுவை பெறுகிறது. இவ்வாறு அறுசுவைகளோடும் சிறப்பிக்கின்ற ஒரு சுவையை உடையது தேங்காய். மேலும் தேங்காய் மூடி அதிகமாக வீட்டிலே சேர்ந்துவிட்டால் அவியல் செய்யலாமா, சீடை போடலாமா, திரட்டுப்பால் செய்யலாமா என்ற ஆராய்ச்சியை ஏற்படுத்தி விடுகிறது. அந்தத் தேங்காய் கொப்பரையாக அமைந்துவிட்டாலோ சோமாசி செய்வதென்று எளிதாக முடிவு செய்யப்படும்.

சில சமயங்களில் தேங்காய்க்குள்ளே பூ இருக்கும். இந்தத் தேங்காய்ப்பூ தனக்கே உரிய ஒரு தனிச் சுவையோடு விளங்குகிறது. சில சமயங்களில் இந்தப் பூ மூடியை முழுவதுமாக நிறைத்துக் கொண்டு பெரிதாக இருக்கும். சில சமயங்களில் சிறியதாகத்தான் இருக்கும். இந்தப் பூவைப் பெரியோர் முதல் சிறியோர்வரை அனைவருமே விரும்பி உண்பர்.

நல்ல மருந்து

இந்தத் தேங்காய் சித்தவைத்தியத்திலும மருந்து வகையாகப் பயன்படுத்தப்படுகிறது என்று பெரியோர் கூறுவர். "முக்கண் பால்" என்றே தேங்காய்ப்பால் ஒரு வைத்திய நூலில் குறிக்கப் பெறுகிறது. இந்தத் தேங்காய்ச் சத்து உடல் நலத்திற்குத் தேவை தான் என்று புதுமுறை விஞ்ஞானமும் வைத்தியமும் சொல்கிறது.

மேலும் சிறிது தேங்காயும் சிறிது வெந்தயமும் வைத்து அரைத்து, தலையில் தடவி, சிறிது நேரம் கழிந்தபின் தேய்த்துக் குளித்துவிட வேண்டும் என்றும் அப்போது தலைமயிர் வளர்வதோடு அழகாகவும், மிருதுவாகவும் இருக்கும் என்றும் வீட்டு வைத்தியமும் கூறுகிறது.

தேங்காய்க்குள்ளே இருக்கும் வெண்பகுதி மட்டுமே இத்தனை பயன்களையுடையது. அதனுடைய பிற பகுதிகளும் பலவாறு பயன் அளிக்கின்றன. அதன் மேல் ஓடு அடுப்பு எரிப்பதற்கும், பாய்லரில் வெந்நீர் கொதிக்க வைப்பதற்கும் பயன்படுகிறது. எரிந்து வீணாகப் போகும்

இதையே மோதிரங்களாகவும், பித்தான்களாகவும், பொம்மைகளாகவும் மாற்றக்கூடிய கலை அறிவு பெற்றவர்களும் உள்ளனர். அழகழகான வர்ணத்துடன் விதம் விதமான வேலைப்பாடும் பொருந்தி, அவற்றைக் கடைகளிலே வரிசை வரிசையாகக் காணும்போது, அது தேங்காயின் ஓடு என்பதையே மறந்துவிடுகிறோம்.

இந்தத் தேங்காய் ஓட்டின்மேல் உள்ள நார்ப்பகுதியும் வீணாவதில்லை. குமட்டி அடுப்பு விரைவாக நெருப்பு பிடிப்பதற்கும் பாத்திரங்கள் தேய்ப்பதற்கும் பயன்படுகிறது. தேங்காய் நாரைப் பயன்படுத்துவதால் பாத்திரங்களும் பளிச்சென்று இருக்கும். தேய்ப்பவர் கைகளும் எரிச்சல் கண்டுவிடாமல் தடுக்க முடியும்.

தேங்காயைப்போலவே அதன் மரத்தினுடைய எல்லாப் பகுதியையும் பயன்படுத்த முடியும். தென்னை ஓலை வீட்டுக் கூரையாகவும், ஈர்க்குகள் தென்னந் துடைப்பமாகவும், தென்னைமரக் கட்டைகள் அடுப்பெரிக்கும் விறகாகவும அமைந்து மனித வாழ்க்கைக்கு மகத்தான சேவையைச் செய்து வருகின்றன. இக்காரணங்களால் அதைக் "கற்பக விருட்சம்" என்று அழைப்பதும் பொருத்தமானதே.

இவ்வாறு வைதீக வழியிலும், லௌகீக முறையிலும் தனக்கென்று ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது தேங்காய். ஆகையினால் தான் மனிதர் நன்றியுணர்வைக் காண்பிக்கும் பொருட்டு, அதற்கு மங்கலப் பொருட்களின் நடுவே இடம் கொடுத்ததோடு மட்டும் நிறுத்திவிடாமல், அதற்குக் கிரீடம் வைத்துச் சிறப்பிப்பதே போன்று, குடுமி வைத்தே நார் உரிக்கிறார்கள்.

இன்ன பல காரணங்களால் தேங்காய் பிற மங்கலப் பொருட்களை யெல்லாம்விட உயர்ந்தது தான் என்று சொல்ல வேண்டும்.

—வானொலி,

அறிவுச் சுடர்

மனிதனை ஒரு சிந்தனைப் பிராணி என்று கூறுகிறார்கள். இருக்கலாம். ஆனால் மனிதர்களில் சிந்தனையைப் பயன் படுத்துபவர்கள் மிகவும் குறைவு. அப்படிப் பயன்படுத்துபவர்களைப் பற்றி நல்ல முறையில் சிந்திப்பவர்கள் அதைவிடக் குறைவு.

—ஆன் டெய்லர்

எமது
வெளியீடுகள்

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
('ஆரம்பக் கல்வி' நிலையம்)
94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.
தபால் பெட்டி எண் 1818.   டெலிபோன் எண் 24544.

ஆரம்பப் பள்ளிகளுக்கு......

* முதல், இரண்டாம் வகுப்புகளுக்கு அரசியலார் வெளியிடுகின்றனர்.

திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் :
பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
மூன்றும் வகுப்பு	0	8	0	3	28–5–'58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13–5–'59
ஐந்தாம் வகுப்பு	1	0	0	11	18–5–'60
ஆரும் வகுப்பு	1	4	0	25	10–5–'61

★

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் :

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

மூன்றும் வகுப்பு	0	8	0	5	28–5–'58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13–5–'59
ஐந்தாம் வகுப்பு	1	0	0	13	18–5–'60

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனூர்.

ஆரும் வகுப்பு	0	12	0	4	16–5–'62

நீதிக் கதைகள்

ஆசிரியர்: வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

ஐந்தாம் வகுப்பு	0 8 0	17	18–5–'60

★

அறிவுச் சுடர்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

ஆறாம் வகுப்பு	0 10 0	10	10–5–'61

MOTHER INDIA SUPPLEMENTARY READER

(By Mrs. Lucy Arulraj)

VI STANDARD	0 8 0	13	10–5–'61

FOR HIGH SCHOOLS

உயர் நிலைப் பள்ளிகளுக்கு

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

	விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறாம் வகுப்பு	1·25	25	10–5–'61
எட்டாம் வகுப்பு	1·75	21	13–5–'59

★

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், B.A.,L.T.,

ஆறாம் வகுப்பு	1·50	28	10–5–'61
ஏழாம் வகுப்பு	1·75	13	16–5–'62

சமூக நூல்

ஆசிரியர்: துரை பழனிவேல், M.A.,L.T.

ஆறாம் வகுப்பு	1·75	14	10–5–'61

சமூக நூல்

ஆசிரியர்: த. சே. உமாபதி, M.A.,L.T.

ஏழாம் வகுப்பு	2·00	18	16-5-'62
எட்டாம் வகுப்பு	2·50	35	16-5–'62

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : K. LAKSHMINARAYANASAMI, B.A.,L.T.

ஆறும் வகுப்பு	1·50	30	10–5–'61

ஆசிரியர் : K. LAKSHMINARAYANASAMI, B.A ,L.T.

பத்தாம் வகுப்பு	2 50	35	10–5–'61

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் ; புலவர் சொ. முருகேசனர்

ஆறும் வகுப்பு	75	4	16-5-'62

மாணவர் இலக்கணம்

எட்டாம் வகுப்பு	0 14 0	4	29–7–'59

இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

ஒன்பதாம் வகுப்பு	1 4 0	11	18–5–'60

த. சே. உமாபதி, M.A.,L.T.

பத்தாம் வகுப்பு	1 8 0	31	10–5–'61

ENGLISH NON-DETAILED

By Mrs. Lucy Arulraj.

Mother India Supplementary Reader VI Std.	0 8 0	13	10–5–'61
Mother ,, ,, ,, III Form	0 10 0	24	10–5–'61

TAMIL NON-DETAILED

அறிவுச் சுடர் (ஆறும் வகுப்பு)	0 10 0	10	10–5–'61
நாடும் மக்களும்	1 0 0	17	18–5–'60
தொண்டை நாட்டு மன்னர்	1 0 0	19	18–5–'60
பூம்புகார்	0 14 0	R.C.No. 9	15-3-'61
திரு. வி. க.	0 14 0	23	13–5–'59

ஆசிரியர் : லீலா பார்த்தசாரதி, B.A.,B.T.,

கணிதம் கற்பிக்கும் முறை	2·00	2	5–7–'61

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A., B.T.

ஆறும் வகுப்பு	0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.
எட்டாம் வகுப்பு	1·25 ந. பை.
ஒன்பதாம் வகுப்பு	1·25 ந. பை.
பத்தாம் வகுப்பு	1·50 ந. பை.

FOR ELEMENTARY SCHOOLS

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : ஆர். சேஷாத்திரி, B.A., B.T.
(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

சென்னை	0·75 ந. பை.
செங்கற்பட்டு	0·75 ந. பை.
வட ஆற்காடு	0·75 ந. பை.
தென் ஆற்காடு	0·75 ந. பை.
சேலம்	0·75 ந. பை.
கோயம்புத்தூர்	0·75 ந. பை.
நீலகிரி	0·75 ந. பை.
திருச்சிராப்பள்ளி	0·75 ந. பை.
தஞ்சாவூர்	0·75 ந. பை.
மதுரை	0·75 ந. பை.
இராமநாதபுரம்	0·75 ந. பை.
திருநெல்வேலி	0·75 ந. பை.
கன்னியாகுமரி	0·75 ந. பை.
ஐந்தாம் வகுப்பு	0·94 ந. பை.
ஆறும் வகுப்பு	0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

பாடப் பயிற்சி திறவு கோல்
(Key to Social Record)

4வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினுக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனேவிடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். வினு விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல் எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இனமாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு பிரதி எட்டணு (50 ந. பை.) விலையில் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்பு வாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இனமாக அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "ஆரம்பக் கல்வி ஆபீஸ்",
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
சென்னை-1.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித்திரு நாடு!

★ படிப்பதற்கேற்ற எழில்மிகு ஏடுகள்!

★ நடிப்பதற்கேற்ற நற்றமிழ் நாடகங்கள்!!

இதோ

பைந்தமிழ் எழுத்தாளர்

திருவாளர் **தாமரைக் கண்ணன்** அவர்கள்

தீட்டிய

அழகிய நாடக நூல்கள்! பள்ளி நூல்நிலையங்களில்
வைப்பதற்கேற்ற அருந்தமிழ்க் கருவூலங்கள்!

	ரூ.	காசு
1. வெண்ணிலா	1	50

த... அ...ணனைத் திருத்தியதுடன் நன்கொடை
யென்று... நா னூறுமைல் தூரம் ஓடும் தங்கைக்கும்

நல்வழிகாட்டியாக இருந்து கல்விக்கூடங்கள் கலைக்கூடங்களாக விளங்கப் பாடுபடும் ஓர் மாணுக்கியைப் பற்றிய நாடகம். கருத்தாழமும் நகைச் சுவையும் நிறைந்த சமுதாயப் படைப்பு!

2. மருது பாண்டியர் 2 00

வெள்ளையர் ஆதிக்கத்தை ஒழிக்க அரும்பாடு பட்டுத் தம் நல்லுயிர் ஈந்து நற்புகழ் எய்திய தமிழ் மறவர் இருவரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் நாடகம். துள்ளும் நடையும் துடிப்புள்ள வசனங்களும் நெஞ்சத்தை உருக்கும் காட்சிகளும் நிறைந்த உணர்ச்சிமிக்க சித்திரம்!

3. அலெக்ஸாண்டர் 1 50

'உலகிலுள்ள காடெல்லாம் நாடாக வேண்டும்; அந்த நாடெல்லாம் நாளை வேண்டும்' என்று மண்ணகமெங்கணும் வெற்றி முரசு கொட்டிய கிரேக்கப் பெருவேந்தனின் வரலாற்றை முழுமையாக விளக்கும் அரிய நாடகம்! உள்ளத்தைக் கலங்க வைக்கும் காட்சிகளும் உணர்ச்சியுடன் வீறு கொண்டு எழச்செய்யும் பகுதிகளும் சிந்தனைக்கு அரிய விருந்தளிக்கும் நிகழ்ச்சிகளும் நிறைந்த ஈடு இணையற்ற ஏடு! தமிழில் இதுபோல் இதுவரை வெளிவந்ததில்லை!!

4. கிள்ளிவளவன் 1 50

கிள்ளிவளவன், நிலாச்சோறு, குமணன், இரத்த பாசம், புத்தர் ஆகிய ஐந்து அழகிய ஓரங்க நாடகங்களின் தொகுப்பு. ஏற்றமிகு கருத்துக்களைக்கொண்ட எழிலார் ஏடு!

கழிவு உண்டு. அருள் கூர்ந்து அணுகுங்கள்.

★

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)
94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

Venkatesan Press, Madras-1.